ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வடவேங்கட

நாராயண சதகம்.

மூலமும் - உரையும்.

இஃது

திவ்வியகவி

நாராயணதாசரவர்கள்

இயற்றியது.



இஃது

திருப்பதி

இரத்தினமுதலியார் அண்டுசன்

அவர்களாற்றமது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1916.

இதன்விலை [redacted]. 0 50

நெ. 34. முத்துகிருஷ்ணன் தெருவு.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

வடவேங்கட

நாராயணசதகம்.

மூலமும் - உரையும்.

பாயிரம்.

நேரிசை வெண்பா.

நஞ்சுவினைக் காமமுத னமதுயி ரைக்காக்கும்
செஞ்சொல்லினோர்சதகஞ்செப்பியது-விஞ்சுபுகழ்
நாராயணதாசந் நன்றாகஞாலத்தே
பாராயணஞ்செய்பவர்க்கு.

(இ-ள்.) மிகுந்தபுகழுடைய நாராயணதாசரெ ன்பவர் செஞ்சொற்களினாலே திருவாய்மலர்ந்தரு ளிய நாராயணசதகமென்னும் பாமாலையானது இந் தப்பூமியினிடத்தில் அன்போடு பாராயணஞ் செய் பவர்களாகிய நமக்குநம்முடைய ஊழ்வினையையழி க்கும் விஷமாகும் நம்முடைய உயிரைக்காக்கும் அமூர்தமாகும்.

காப்பு.

நேரிசைவெண்பா.

நல்லவடவேங்கடத்து நாராயண்சதகம்
சொல்லவெனக்குத் துணையாமே-மல்லர்
பணையான திண்புயத்துப் பாண்டவர்க்குமுன்னந்
தூணையானபாதந் துணை.

(இ-ள்.) அழகியவடக்கின்கணுள்ள திருவேங்கட த்தி லெழுந்தருளிய ஸ்ரீமந்நாராயணன் விஷயமாக ஓர்சதகமென்னும் பாமாலை பாடுகிற தற்குப் பலம்

பொருந்திய பருத்ததாகிய அழுத்தமுள்ள புயங்க ளைப்படைத்த பாண்டவர்க்கு முற்காலத்தில் துணை யாயிருந்த அவருடையபாதங்கள் துணையாயிருப்ப துமன்றி என்னுயிர்க்கும் அவைகளேதுணையாகும்.

நூல்.

கலிவிருத்தம்.

பிரிந்திசைவண்ணம்.

நீர்கொண்டுதன் மலர்கொண்டுநன் னெறிகொ ண்டுநின் குறிகொண்டுவன், சீர்கொண்டுவந் தனை செய்துணைச் செறிவார்களென் பெறுவார்களோ, பேர்கொண்டிலன், பொறிகொண்டிலன்பெரியோர் களா லருள்கொண்டிலன், நார்கொண்டுகண்டருள் சோதியே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பரிசுத்தமானதீர்த்தங்களையும் குளிர்ச்சி பொருந்திய புட்பங்களையுங்கொண்டு நன்மார்க்கத் தையறிந்து தேவரீருடையசொரூபத்தைத்தெரிந்து அழகியஞானத்தைப் பொருந்தித்தண்டன்சமர்ப்பி த்து உம்மைஆராதனைசெய்து அடைந்தபேர்க ளெ ல்லாம் என்னபலனைப்பெறுவார்களோஅறிகிலேன் நாயினேன் தாசியநாமமுதலிய பஞ்சசம்ஸ்காரத் தையும் பாகவதராலே கிருபையுங் கொண்டவனே அல்ல ஆதலால்அன்புகூர்ந்து சந்தோஷித்து இரட் சித்தருளவேண்டும் சோதிமயமாகிய ஸ்ரீமந்நாரா யணா எ-று. ௧

பரகாரியம் பலசெய்துனைப் பணியாமலே பிணி யானபின், விரசாயிருந்தழுதாவதென் வெறியார்கு ணங்குறியார்களோ, உரகாரிமேலுபகாரியாயொரு சாரியா வுலவாரியா, நரகாரியே முரகாரியே நாரா யணா நாராயணா.

(இ-ள்.) கொலை களவு காமம் பொய் வஞ்சனை இவைமுதலாகிய அனேகதுஷ்ட கிருத்தியங்களைச்

செய்து தேவரீரைப்பணியாமல் பிணியானது சம்ப்வித்தபிற்பாடுங் கபடமாயிருந்து அழுததினாலே உண்டாகிய காரியம்ஒன்றுமில்லை ஆதலால்பயித்தியக்காரக்குணங்களை நல்லோர்களேயறிந்து இரட்சிப்பதுகடன் அத்தன்மைபோல அடியேனையிரட்சிப்பது உமக்கேகடன்சர்ப்பங்களுக்குப் பகையாகிய கருடவாகனமீதி லெழுந்தருளிஅடியார்களுக் குபகாரமாக ஒப்பில்லாதசேவையாய் உலாவிவந் தருளாநின்ற ஐயனேநரகாசுரனுக்கும் முரகாரசுரனுக்கும் வைரியாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று.

சிவனீதலம் புயனீதலந் திரனீதல் சந்திரனீதலா,
தவனீதல்விண் ணவனீதன்மா தவரீதலோ டெவரீதலும் அவனீதலந் தனிலெண்ணினுன் னடியாரடிப்
பொடியாகுமோ,நவநீதமுண் கருமேகமேநாராயணா
நாராயணா.

(இ-ள்.) சிவனும்பிர்மாவும் இந்திரனும்சந்திரனும்சூரியனும்தேவர்களும் ரிஷிகளும்இவர்களுடனேகூட பின்னும்யாவர்களுங்கொடுக்காநின்ற பலன்களையெல்லாம் பூதலத்திலே எண்ணிப்பார்க்கு மிடத்தில் தேவரீருடைய அடியார்கள் திருவடித்துகளும் ஒப்பாகமாட்டாது ஆதலால்அவர்களை நினைப்பதேயில்லை கோபாலர்கிரகத்திலே வெண்ணெயை யுண்டருளும் நீலமேகவண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணா.

அலசத்தகும் பிணிவந்துநா னலையாமலேயமரர்க்
கிடும் மலசத்துள்ளோர் துளிநல்கியென் கவியைக்
கொளாய்கருணாகரா, குலசக்கரன் சலசேகரன்குல
சேகரன்புகழ்சாகரா, நலசக்கராசலசக்கரா நாரா
யணா நாராயணா.

(இ-ள்.) தேகமானது வருத்தத்தையடையும்படியானநோய்வந்து அடியேன்அலையாமலிருக்கதேவர்களுக்குக் கொடுத்தருளாநின்ற கலசத் தமிர்தத்திலே ஒருதுளிகடாட்சித்தருளி அடியேனுடைய கவி

தையைக் கைக்கொள்ளவேணுங் கருணைத்திருமே
னியனே வச்சிரபாணியுங் கங்காதரனுங் குலசேகர
ராகியஆழ்வாரும் தோத்திரம்பண்ணுகின்ற கீர்த்தி
யாகிய சமுத்திரத்தையும் நல்லசக்கரத்தையும் தா
மரைமலர்போன்ற திருக்கரங்களையும் உடைத்தா
கிய ஸ்ரீமந்நாராயணா எ-று. ௪

எதிரும்பெரும் பிணியும்பறந் திரையுஞ்செறிந்து
ழிதலும்பறந், துதிரந்திரிந் துடலங்கொளுந் துயரந்
தெளிந் துணைநம்பவா, மதிமயங்கிடந் தொளிருஞ்
சடா மகுடந்தொறுந் தொணியும்பவா, னதிவந்தெ
ழும் பதபங்கயா நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேகத்திலே எதிர்த்துவராநின்ற பெரி
தாகிய நோய்மிகுந்து இரைப்புநெருங்கிஅழகுகுலை
ந்துஉதிரமூறிந்து கொள்ளாநின்ற துக்கமானதுதெ
ளிந்துபோய்த் தேவரீரைஅடியேன் நம்பும்படியா
கப் பிரசன்னமாகவேண்டும் சந்திரன்வாசமாய்ப்பி
ரகாசியநின்ற சிவனுடையசடாமகுடந்தோறும் மு
ழக்கம்நிறைந்திட ஆகாயகங்கையானது வந்தருளா
நின்ற திருவடித்தாமரைகளை யுடைத்தாகிய ஸ்ரீமந்
நாராயணா எ-று. ௫

எயலாருமுன்னுகரத்துளே யென்றேடுமங்கு
றைகின்றபேர், அல்லாதுவேறில்லாமையா லனைவர்
க்குமோ ரருளல்லவே, வல்லாருளார்மாட்டாருளா
ர்வறியாருளார் வாழ்வாருளார், நல்லாருளார்பொ
ல்லாருளார் நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய ஆத்மகோடிகளெல்லா
ந்தேவரீருடையகுட்சிக்குளே வாசம்பண்ணுகிறதே
யல்லாமல் வேறேயிடமில்லை யாதலால்யாவருக்குஞ்
சமானமான கிருபையேயன்றிப் பேதமில்லையே அ
த்தன்மையாயிருக்க இதிலேவலியரென்றும் மெலிய
ரென்றும் வாழ்வினரென்றும் நல்லவரென்றும்பொ
ல்லாதவரென்றும் உண்டாகியதென்ன மாயமே ஸ்ரீ
மந்நாராயணா எ-று. ௬

நீகாசுதா நீதூசுதா நீயாடுதா நீமாடுதா, போகா தேபேர்க்கிடுசோறெனப் புலையர்க்கு நெஞ்சுருகச் சொன்னேன், ஆகாதகாரியமென்னிடத் தளவற்ற துண்டவையாய்வையோ, நாகாசலா நாகாலயா நாராயணா நாராயணா.

(இ-ள்.) பணம் வஸ்திரம் ஆடுமாடுஞ் சாதமுமி வைகளை நீங்கள்கொடுங்களென்று சொல்லுவதற்கு யோக்கியமில்லாத பேர்களாகிய மிலேச்சருடைய நெஞ்சானது உருகும்படியாய்க் கவிதைபாடித்தே டிக்கொண்ட பொல்லாதகாரியங்கள் கணக்கில்லா மலடியேனிடத்தி லிருக்கின்றன அவைகளை ஆராய் ந்துபாராமல் இரட்சிக்கவேண்டுஞ்சேஷமலையையும் சேஷனாகிய கோவிலையும்பெற்ற ஸ்ரீமந்நாராயணா.

அயனெழுத் தளவன்றியே யதிகங்கணப் பொழுதாயினும், பவனாபிருப்பவரில்லை யிப்படிமிதிலப் படியன்றியே, வியனாயுனைத் தொழுவார்களவ் விதி வெல்வராய் மறைசொல்லுமே நயனாரதன்புகழ்சோ தியே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பிரமதேவனானவன் எழுதினபிரகாரமே அல்லாமல் அதிகமாக க்ஷணப்போதாகிலும் இந்த ப்பூமியிலே பிரயோசனப்பட்டிருக்கிறவ ரில்லையெ ன்றாலும் அப்படி அல்லவென்று சந்தோஷமாகதே வரீரைத் தொழுதபேர்களெல்லாமந்தவிதிவசத்தை க்கடந்திருப்பார்களென்று வேதங்கள்முறையிடுகி ன்றதே நயத்தோடுங்கூடிய நாரதமகாமுனிவர்தோ த்திரம் பண்ணுகின்ற சோதிமயமாகிய ஸ்ரீமந்நாரா யணா எ-று. அ

ஓமங்களால் விரதங்களாலுயர்தீர்த்த யாத்திரை கோடியால்ஏமங்கள்கன்னியரீதலாவெழுபாரையுஞ் சுழல்கின்றதால், ஆமைம்புலன்கடிகின்றதா லடை புண்ணியங் கணமேனுநின், நாமம்புகன்றதுபோலு மோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஓமங்களாலேயும் விரதங்களாலேயு முயர்ச்சிபெற்ற கோடிதீர்த்தயாத்திரைகளாலேயுஞ் சுவர்ணங்களுடனே கன்னிகாதானங்களாலேயும்எழுபூமியையும் பிரதட்சணம் வந்ததினாலேயும்உண்டாடாகிய பஞ்சவிந்திரியங்களை நீக்கினதினாலேயும்வராநின்ற புண்ணியங்களெல்லாந்தேவரீருடைய திருநாமத்தைக்ஷணப்போதாகிலுஞ் சொல்லியபுண்ணியத்திற்கு ஒப்பாகமாட்டாது ஸ்ரீமந்நாராயணா எ-று.

பாடேனலோ கவிசிந்துனைப் பணிகேனலோபல காலெழுந், தாடேனலோ பலிபீடமுன்னணுகேனலோ சடகோபமே, சூடேனலோ வலமாகவே சுழலேனலோ கதியென்றுனை நாடேனலோ கொடியேனலோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீரைக் கவிதைகளாலே பாடினதுமில்லை, தண்டன்சமர்ப்பித்ததுமில்லைபலகாலமுமெழுந்து ஆடினதுமில்லை பலிபீடத்தின்முன்னே வந்ததுமில்லை சடகோபத்தை முடியிலே சூடினதுமில்லை கதியொன்றுநினைத்ததுமில்லை இத்தன்மையான பாவியானவன் கடைத்தேறுமார்க்கமுளதோ ஸ்ரீமந்நாராயணா எ-று. ௰

அறவைக்கெலா மடிமூலநா னருளுக்கெலா மடிமூலநீ, பிறருக்கெலாங் பெறுவித்ததும் பெறுவிப்பதும் பிணைதட்டிலே, உறவைக்கிலென்னுயிர்காவலுக்கொவ்வாதுவா துரைசெய்வனோ, நறைவைத்துழாயணிமார்பனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) லோகங்களுக்கெல்லாம் அடிவேராகியிருப்பதுயானேயன்றிவேறில்லை கிருபைகளுக்கெல்லாம்மூலகாரணமாகி யிருப்பது தேவரீரையன்றிவேறில்லை அயலார்களுக்குநீசெய்தபலனையும் இனிச்செய்கின்ற பலனையுந் தராசினுடைய தட்டுகளிலே பொருந்தவைத்தால் என்னுடைய உயிரை இரட்சிக்கிற

பலனுக்கு அவைசரியாகமாட்டாது ஆதலால்வாது பேசுவதில்லை தேன்பொருந்துந் திருத்துளவந்தரித் ததிருமார்பை யுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணா..

பசியாதமந் திரமேவரும் பழியாதமந் திரமந்தான், விசியாதமந்திரகோயிலேவிழியாத மந்திரநெஞ்சிலே, மூசியாதமந்திரமோதுவார் முதலானமந்திரமொன்றிலே, நசியாதமந் திரமோநமோநாராயணா நாராயணா.

(இ-ள்.) பசியையெழுப்பாதது எவர்களாலேயும் பழுப்பில்லாதது யமன்பாசத்திற் கட்டுப்படாதது நோயைப்பார்க்காதது நெஞ்சலிலேகெடுதலில்லாதது ஓதுவார்க்கெல்லா முதன்மையாயது ஒன்றிலேயும் நாசமில்லாதது அவையாதெனில்ஓம்நமோநாராயணாவென்னுந் திருமந்திரமேயல்லது வேறில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று. ௧௨

அபராதமாகியபலசரக் கடலாகவோ டமகேற்றியே, விபரீதநோ யலையிற்குளே விடநின்றதாழ்வினையென்செய்வேன், இபராசனைக் கரையேற்றுநீ யெனையேற்றலிங் கரிதல்லவே, நபராசனேசுயராசனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) அபராதங்களாகிய பலசரக்குகளை நெருக்கமாகத் தேகமென்னும் ஓடத்திலேயேற்றி விபரீதநோயாகிய கடலுக்குள்ளே ஊழ்வினையானது தள்ளிநின்றது என்செய்வேன் கஜேந்திரனைக் கரையேற்றின் தேவரீர் அடியேனைக்கரையேற்றுதற்கு இவ்விடத்தில் அரிதல்லவே வேர்களுக்குஞ் சுபங்களுக்குங் கர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணா.

வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறைசேடன்வாய், நான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே கதிசொல்லுமே, தேன்சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லு

மே திகையாமலே நான்சொல்லவே துவுமாவெனோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவர்களுடைய நாவும் உலகத்தோருடையநாவும் வேதங்களுடையநாவும் கல்விநிறைந்த ஆதிசேடனுடைய இரண்டாயிரநாவும் பெரிதாகிய சபையோடுங்கூடிய முனிவருடையநாவும் சந்திரன் முதலாகிய நவக்ரகங்களுடையநாவும் தேன்போலுஞ்சொல்லினையுடைய பார்வதிபாகத்திலிருக்கும் ருத்திரனுடைய நாவும், திக்குப்பாலருடைய நாவும் தோத்தரிக்கும்படியான தேவரீருடைய கீர்த்தியை மாறுபடாமல் அடியேனுடைய நாவினாலேசொல்வதற்குக் காரணமாவேனோ சொல்லும் ஸ்ரீமந்நாராயணா எ-று.

௪௩

சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றுமருந் தழற்தீயிலே, உருக்காமருந் துலர்த்துண்டையா வுருட்டாமருந் துழக்கெண்ணெயில், கருக்காகமருந் திகற்கையிலே கசக்காமருந் திருக்கல்லிலெ, நருக்காமருந்திருக்கின்றதே நாராயணா நாராயணா.

(இ-ள்.) வெயிலிலே சுருங்காதது உடலிலே யூறினாற்சுழற்றாதது அக்கினியிலேயுருக்காதது உண்டையாகவுருட்டி உலர்த்தாதது உழக்கெண்ணெயிலே சுருக்காதது வலியகைகளிலே கசக்காதது இரண்டு கல்லிலே நெருக்காதது இத்தன்மையைக்கொண்ட மருந்தானது இருக்கின்றது அதுயாதெனில் அஷ்டாட்சரமேயன்றி வேறில்லை ஸ்ரீமந்நாராயணா.

தகவாயுனைப் புகழாமலே சலமேதொடுத் திகழ் பேசுவார் முகவாயிலேபுழுவீழுமே முனையந்தகன் கிளைபோதுமே, ககவாகனா மிகுமோகனா கனகங்களே பரமார்பெலாம் நகவாளினாலரிசியமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) மேன்மையாகத்தேவரீரைத் தோத்திரஞ் செய்யாமல் கோபமேயொருந்திப் பகையாக இழி

வுபேசுவாருடைய முகத்தோடுங்கூடியவாய்களிலே புழுக்கள்சொரிவதுமல்லாமல் எதிர்க்காநின்ற யமதூதர்மோதுவார்கள் கருடவாகனனே மேகசொரூபனே இரணியனுடையமார்பையும் அவனதுசேனைகளையும் நகமென்னும் ஆயுதத்தினாலே சங்கரியாநின்ற நரசிங்கரூபமாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று.

தலமேழையும்படாமோதினுஞ்சலமோவிடாலகிலாண்டநா, பலம்யாவுமென் மனைசேரினும் பசைபோதிடாதிசைமாதரார், குலம்பாவுமின்பம்தீயினுங் குறுகாதுமால்பெறுகாயமே, நலமேவுமேபோலமேவுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஏழுலோகத்தையும் அழியும்படியாய்ப் போர்பண்ணினாலுங் கோபங்களடங்குவதில்லை அகிலாண்டங்களிலே யிராநின்றநன்மையானபாக்கியங்களெல்லாம் என்வீட்டிலே நிறைந்தாலும் ஆசைகளொழிவதில்லை பெண்களென்றிசைந்த சாதிகளெல்லாம் இன்பத்தைக்கொடுத்தாலுங் காமங்கள் நீங்குவதில்லை இத்தன்மையைக்கொண்டு என்னுடைய தேகமானது எந்தத்தன்மையைப்பெறுமோ அறிகிலேன் பிரகாசியாநின்ற மேகவண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. கஎ

பண்டிட்டதா மண்டுந்தியிற் படிவார்நிணக் கடியாரெனத், தொண்டிட்டுநின்றொழில் கொள்வதோ துயரத்திலேயடைவிப்பதோ, கொண்டிட்டநின்புகழ்நிற்கவே குறையாளரைப்புகழ்கின்றவாய், நண்டிட்ட பாழ்வளையொக்குமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பழமையா யிராநின்ற தேவரீருடையநாபிக்கமலத்திலே பொருந்தின உயிர்களை யெல்லாம் அன்பராகும்படி அடிமைகொண்டு கயிங்கரியத்தைக்கொள்ளவேண்டுமேயல்லாமல் துக்கங்களடையச்செய்யலாமோ வேதங்கள்கொண்டிராநின்ற உம்மு

டைய கீர்த்தியைவிட்டுக் குறைச்சலான தெய்வங்களைப் புகழாநின்றவாய்களெல்லாம் நண்டிட்டுத்தோண்டியிட்ட பாழ்வளைக்கு ஒப்பாவதேயன்றிப் பிரயோசனமில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று. கஅ

பகையானவன் பிணிசெய்ததோர் பதினாயிரம்பிழையுண்டுநான், வகையாநினக்குரைசெய்கிலேன்வருநோயுநின் னருளாதலால், மிகையானபின்முறையிட்டனென் விடுவித்திடாய் விளையாடினால், நகையார்களோ குகையார்களோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய தேகத்திலே பகையாகியபொல்லாத பிணியானதுசெய்யாநின்ற வுபத்திரவங்கள் பதினாயிரமுண்டு இன்னவிதங்களென்று தேவரீருக்கு விண்ணப்பஞ்செய்கிலேன்வராநின்றஇந்தநோயானது உமதுகிருபையேயல்லாமல் வேறில்லை ஆதலால்துன்பம் வந்தபிற்பாடு முறையமிட்டேன் இதைநீக்கிவிடாமல் விளையாடினால் உலகத்தார்நகைப்பதுமல்லாமற் இகழ்ச்சியும் பண்ணுவார்கள் ஸ்ரீமந்நாராயணா எ-று. கக

குப்புற்றகன் றுடனேலாங் குழுவாகவோர் குழலூதவே, மப்புக்கொளுந்தொனிகாதி லவ்வழியே குபுட்களுமுண்ணவே, துப்புக்குமோர் தயிர்வெண்ணெய்பால், சொரிகைக்குமவ்விடைநங்கைமார், நட்புக்குமாடியகண்ணனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) துள்ளின்கன்றுகளுடனே பசுக்களெல்லாங் குவிந்திருக்கவும் ஆகாயவழியிலே செல்லாநின்ற பட்சிகளுடைய காதுகளிலேகேட்கவும் ஒப்பில்லாத வேணுகுழலூதித் தொனியாக மப்புக்கொட்டினதுமல்லாமற் அங்கிருக்கும் இடைப்பெண்கள் பொழியாநின்றநெய்க்கும், மோருக்கும், தயிருக்கும் வெண்ணெய்க்கும் பாலுக்கும் அவர்களுடைய நட்பிறுக்கும் நடனஞ்செய்த கண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. உ0

தாயிற்றபேர் தாயாகுவாய் தமரிற்றபேர் தமராகுவாய், சேயிற்றபேர் சேயாகுவாய் செயலிற்றபேர்செயலாகுவாய், வாயிற்றபேர் வாயாகுவாம் மலைபோலுநோய்க்குனைநம்பினால், நாயிற்றுமுன்பனிநிற்குமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தாயில்லாதபேர்களுக்குத் தாயாகவும், சுற்றமில்லாதபேர்களுக்குச் சுற்றமாகவும், பிள்ளையில்லாதபேர்களுக்குப் பிள்ளையாகவும், உதவியில்லாதபேர்களுக்கு உதவியாகவும், வாக்கில்லாதபேர்களுக்குவாக்காகவும், அருளாநின்றதேவரீரை அடியேன் மலைபோலுங் கொண்டநோய்க்குநம்பினால்சூரியன்முன்னே பனிநீங்குமாப்போலேயன்றி நிற்குமோ ஸ்ரீமந்நாராயணா எ-று. உக

மந்தன்புதன் குருவெள்ளி சேய்மதிராகுகே தரிநாடொறுந், தந்தம்பெலா விடமேவினுஞ் சகலேசநின்சரணண்டினால், எந்தம்பிரா னிவனென்று கொண்டேகாதசப் பலனீலமே, நந்தன்கதாநம்பும்பதா நாராயணா நாராயணா.

(இ-ள்.) சனி புதன் குரு சுக்கிரன் செவ்வாய் சந்திரன் ராகு கேதுசூரியன் இவர்கள்நாடோறுந் தங்கள்தங்கள்பொல்லாத இராசிகளிலே யிருந்தாலும் சகலத்துக்கும் ஈசனே தேவரீருடைய திருவடியை அடைந்தால் எங்களுடையதம்பிரான் இவனேயென்று அன்புகொண்டு பதினோராமிடத்துப்பலனைக் கொடுப்பார்கள் நந்தகோபனுடைய திருக்குமாரா நாயினேன் நம்பாநின்ற பரமபதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. உஉ

ஆற்றாமையொன் றமையாமையொன் றறியாமையொன்றருளாமையொன் றேற்றாமையொன் றிசையாமையொன்றின்னாமையொன் றிருதாளையும், போற்றாமையொன் றடியாருடன் பொலியாமை யொன்

றொருமெய்யிலே, நாற்றுய்விளைந்திடலாகுமோ நா
ராயணா நாராயணா.

(இ-ள்.) அயலார்வாழ்வைக்கண்டு அவதிப்படுத
ல்பொறுமைநீங்குதல் பேதமைவளர்த்தல் ஈதன்ம
றுத்தல் முயற்சியடைதல் இங்கிதம்ஒழித்தல் பொ
றுமைமிகுதல் திருவடிப்புகழ்விடுதல் அடியாருடன்
கூடாதிருத்தல் இவைகளெல்லாம் நாயினேனுடைய
ஒருதேகத்துக்குள்ளே நாற்றுக்குள்போல வளரலா
மோ ஸ்ரீமந்நாராயணா எ-று. உரு

தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீ பொ
லிகைக்குநீ, மேன்மைக்குநீவன்மைக்குநீ மிகுதிக்கு
நீதகுதிக்குநீ, புன்மைக்குநீபுலமைக்குநீ பொறுமை
க்குநீ மறுமைக்குநீ நன்மைக்குநீ திண்மைக்குநீ நா
ராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய ஒழுக்கத்துக்கும் சலி
கைக்கும் பிரகாசத்துக்கும் மெலிமைக்கும் வலிமை
க்குங்குற்றத்துக்கும் முயற்சிக்கும் பொல்லாங்குக்
கும் அறிவுக்கும்பொறுமைக்கும் மோக்ஷத்துக்கும்
நன்மைக்குந் திண்மைக்குஞ்சகலத்துக்குந்தேவரீரே
யல்லாமல் வேறில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று. உசு

வேட்பித்ததுன் பெருநெஞ்சமேவியப்பித்ததுன்
விளையாடலே, கேட்பித்ததுன்பலநூல்களே கிளர்
ப்பித்ததுன்பதிவாசமே, பேட்பித்ததுன்கனசத்தி
யே பிழைப்பித்தவெம் பிணிப்பித்தவாழ், நாட்பிச்
சையுந்தரவேண்டுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) உமது திருவுள்ளமே யெனக்கு இன்பம்
தந்தது, உமது திருவிளையாடலே யெனக்குச்சந்தோ
ஷஞ்செய்வித்தது உமது திவ்வியப்பிரபந்த முதலா
கிய புராணங்களே எனக்குக் கேட்கப்பண்ணியது
உமது திருப்பதிகளே யெனக்குவாசத்தையுண்டாக்
கியது உமது கனம்பொருந்திய வலிமையே எனக்கு
ஆதரவுபுரிந்தது ஆதலிலடியேனுடையகுற்றத்த

யும் வெவ்விதமாகிய நோயையும் நீக்கிவிட்டு இனி வாழ்நாளாகிய பிச்சையுந்தரவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று. உரு

பூரிக்குநின் கொடியென்னவே புளகிக்குநின்சன மென்னவே, ஈரிக்குநின்சபையென்னவே யிரதிக்குநின்புகழென்னவே, ஆரிக்குணம்பெறுதேவர்தானடியாருளந்தானந்தமே, நாரிக்கு வில்லொடியச்செய்தாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) உமதுகருடக்கொடியேயென்றால்எனது தேகம்பூரிக்கும் உமதுஅடியார்களேயென்றால் எனதுமயிர்புளகிக்கும் உமதுசபையேயென்றால் எனது கண்களிலேஆனந்தபாஷ்பம்பெருகும்உமதுபுகழே யென்றால் எனதுமனது ரம்மிக்கும் ஆதலால் இத்தன்மையான குணத்தைத்தேவர்களிலே எவர்கள்தான்பெற்றார்கள் பாகவதருடைய இருதயத்தில் ஆனந்தமானவனே சானகிக்காக ருத்திரன்வில்லை ஒடியச்செய்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா எ-று.

தேன்பாடிதா வனமாலையுந் திருவாழிசங்குமேந்தியே, தான்பாடி நாரதனுடுமுன் சபைமானிடர்க்கதிதூரமே, வான்பாடியுட்புயலொன்றுதான்வருமென்று வாடுவதென்னவே, நான்பாடினால் வரவேண்டுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) நாரதமுனியானவர் பாடியாடாநின்ற தேவரீருடைய சபையானது மானிடர்களுக்கு அதிகதூரமாகவிருக்கும் ஆதலால்வரக்கூடாது வானம்பாடியென்னும்பட்சியானது நீருண்டமேகங்கள் என்றைக்கு வருமோவென்று மனதுவாட்டங்கொள்வதுபோல அடியேன் வருந்திப்பாடினால் அத்தன்மைபோலவந்து இரட்சித்தருளவேண்டும்வண்டுகள் பாடித்தாவாநின்ற ஸ்ரீமந்நாராயணா எ-று. உஎ

மானேயுநின் னருளற்றநாள்வாய்நீர்மருந் தாயங்ஙனே, ஆனேறுநின் னருளற்றநாள் சஞ்சீவியைக்

தளியேறுமே, தாஞேரையண்டினபேர்கடா ரடியா ருளத்தானந்தமே, நாஞேதவா ஞாஞேதையா நா ராயணு நாராயணு.

(இ-ள்.) மகத்தாகிய நோய்களெல்லாந் தேவரீரு டையகிருபையைப் பெற்றநாளையிலே உமிழ்நீரேம ருந்தாகி அங்ஙனேஓடிப்போகும் உமதுகருணையில் லாதகாலத்திலே சஞ்சீவியைக்கொடுத்தாலுந் தள்ளி விட்டு அதிகமாகுமாதலா லிதையறிந்தபேர்களை அ டைந்தபேர்கள் சுகத்தைப்பெறுவார்கள் அடியார் கள் இருதயத்தில் ஆனந்தமானவனே நாயினேன் தோத்திரம்பண்ணினால் ஞானஉதயஞ் செய்தருள வேண்டும் ஸ்ரீமந்நாராயணு எ-று. உஅ

ஈசன் பரன் பிரமன் பிதாவிறைவிண்டுவண்டுறை தண்டுழாய், வாசன்சராசரனென்றுநின் வழியன்ப ர்வாழ் பதிதன்னிலே, தீசங்கடம் பிணிதாழுமே சி றைசண்டைவஞ்சனைவீழுமே, நாசங்கட்ந் துயிர்வா ழுமே நாராயணு நாராயணு.

(இ-ள்.) ருத்திரனுக்குப் பரமனேயென்றும் பிர மனுக்குத் தந்தையேயென்றும், கர்த்தனேயென்று ம் விஷ்ணுவேயென்றும் வண்டுகளுடனே குளிர்ச்சி பொருந்தாநின்ற திருத்துழாயினிடத்தில் வாசனே யென்றுஞ் சராசரங்களானவனேயென்றுந் வேதரீ ரைத் தோத்திரம்பண்ணி வழிபடாநின்ற அடியவர் கள் வாழ்ந்தருளுந் தலங்களிலே பொல்லாதசங்கட ங்களும் நோய்களும் சிறைகளும்போர்களும் வஞ்ச னைகளும் இவைமுதற்குற்றங்கள் யாவும்நீங்கி மற்ற வுயிர்களெல்லாம் வாழ்ந்திருக்கும் ஸ்ரீமந்நாராயணு எ-று. உகூ

ஆபாதவா யுனைவாயுமே யடியாருடன் படைப ண்ணுமே, மாபாவநூல்பலகற்குமே மறைபன்னு வாதியர்தம்மினும், ஒபாவியே னிவைநின்முனே யு ரைசெய்தனன்விரைசெய்தபூ, நாபாபராபரனேயரீ நாராயணு நாராயணு.

(இ-ள்.) அபத்தம்நிறைந்த என்னுடையவாயான
து தேவரீரைவைதுகொண்டேயிருக்கும் அடியார்க
ளுடன் போர்பண்ணிக்கொண்டேயிருக்கும் மகத்
தாகிய பாபசாஸ்திரங்களையேகற்கும்ஆதலால்வேத
த்திலேசொல்லாநின்ற விரோதிகளைப் பார்க்கிலும்
அதிகரித்திராநின்ற விரோதியாகிய நாயினேன் தே
வரீர்சந்நிதானத்திலே விண்ணப்பஞ்செய்துவிட்டே
ன் உனதுசித்தம் எனதுபாக்கியம் வாசனை சேர்ந்த
நாபிக்கமலம் பொருந்தாநின்ற பராபரனென்னும்
அரியாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. ௩௰

காற்பாலினிற் கடவாதவன் கலிகாலமே திரையா
டிடுந், தோற்பாவைநா னதுமெய்ச்சவேதொடுசூத்
திரத்துறைகாரனீ, மேற்பாவபுண்ணியமான நல்வி
னைதீவினைக் கெவராகுவார், நாற்பாலினுக் கொரு
மூலமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) கடலிலே உதித்துவராநின்றசூரியனாலே
அறியும்படியான காலப்பிரமானத்தோடுங் கூடியக்
லிகாலமேதிரையாகவும் ஆடாநின்ற தோற்பதுமை
யானாகவும் மனதுமெச்சும்படியாய்தொடுக்காநின்ற
சூஸ்திரத்துறைகாரர் தேவரீரானால் மேலேவாராநி
ன்ற பாபபுண்ணியங்களுக்கு அதிகாரிகள் எவராகு
வார்கள் இந்தநியாயத்தைத் தெரியப்படுத்தவேண்
டும் பறப்பன ஊர்வன நடப்பன இருப்பனவாகிய
நான்குவித சாதிகளுக்கெல்லாஞ்சமானமான ஆதர
வுதேவரீரேயன்றிவேறில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று.

இரையாலெழுஞ் சுவரானநா லிருசாணுடம்பிடி
யாமலே, கரையாமலே தகராமலே கழலாமலேயழ
லாமலே, திரையாமலே வினைமூடிகண் டிறவாமலே
வகையென்னைதா, னரையாதசே றிடுமையனேநா
ராயணா நாராயணா.

(இ-ள்.) ஆகாயத்திலே வளராநின்ற என்சாணுட
ம்பாகிய சுவரானது கரைந்துபோகாமலும் இடிந்து

போகாமலும் யதிர்ந்துபோகாமலும் வெந்துபோகாமலும் திரைந்துபோகாமலும் வினையினாலே இறந்துபோய் மறுபடியும்பிறந்து விழிதிறவாமலும் இருக்கும்வகையாதெனில் நரைதிரை மூப்பில்லாதஅமுதத்தைக் கொடுத்தருளவேண்டும் என்னையனுகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. கூஉ

புற்கொண்டுவாழ் பசுவாரெடார் புலியாழ்கிணற்றிடைவீழினுங், கற்கொண்டுவா தடிகொண்டுவா மடிதென்பரப் படுபாவிநான், ஏற்கொண்ட நோய்க்கெவராகுவா ரினிநீயலா திலையெட்டியும், நற்கொண்டலால் வளர்கின்றதே நாராயணா நாராயணா.

(இ-ள்.) புல்லையுண்டுவாழாநின்ற பசுவானது கிணற்றிலேவிழுந்தால் கண்டவர்கள்யாரேனும் எடுத்துவிடுவார்கள் புலியானது விழுந்ததானால் சீக்கிரமாய்க்கற்களுந் தடிகளுங்கொண்டு கொல்லுவார்கள் அத்தன்மைபோலப் படுபாவியான என்னுடையதேகத்திலேகொண்ட நோயைத்தீர்க்க எவரிருக்கிறார்கள் இனிதேவரீரையன்றிவேறில்லை மழையினாலே எட்டிச்செடியும் வளர்வதுபோல உம்முடைய கிருபையினாலே அடியேனும் வளரவேண்டும் ஸ்ரீமந் நாராயணா எ-று. கூகூ

அரசன்கையா லபயம்பெறு ரயலாளுமன்னரையண்டினால், விரசென்றுவந்திட மீவர்நீவினவாதவிகளண்டினால், வரசங்கசாதியரஞ்சுவார் வருகென்னமேல்வகை யென்னதான், நரசிங்கனேமுரபங்கனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தாங்கள் நம்பியிருக்கும் அரசனாலே பிரயோசனமில்லையென்று மறுமன்னனவரிடத்திலேசேர்ந்தால் சந்தோஷித்துஎதிரேவந்து இடங்கொடுத்து இரட்சிப்பார்கள் அத்தன்மையாகத் தேவரீரை நம்பினபேர்கள் யாவரேனும் உம்மைவிளவாமல்வெறுத்துப் பக்கத்திலேசென்றால் முக்கியமான சங்கரா

முதலாகிய தேவதைகளாலும் இரட்சிக்கப் படப் படுவார்கள் ஆதலால்கதிவேறில்லை அடியேனைவாவென் றழைக்க வகையென்னவெண்ணி யிருக்கிறீரோ தெரியாது நரசிங்கரூபனேமுரகாசூரனைக் கொன்ற ஸ்ரீமந்நாராயணா எ-று. ௩௪

கோட்சொல்லுவேன்வதைசொல்லுவேன் குறை சொல்லுவேன் முறைசொல்லுவேன் கீட்சொல்லு வேன்மிகசொல்லுவேன்கிலிசொல்லுவேன்வலிசொல்லுவேன் சூட்சொல்லுவே னயனாழிநாள் சொல வேண்டினுஞ்சிறிதுன்னையோர், நாட்சொல்லவென் றறிகின்றிலே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பிரமகற்பபரியந்தம் அடியேனுடையநாவானது கோள்களும்வசைகளுங்குறைகளும் முறைகளும் கீழ்மைகளும் குற்றங்களும் பயங்களும் வலிமைகளும் வஞ்சனைகளும் இவைகளைச்சொல்லுமேயன்றிக் கொஞ்சமாகிலுந் தேவரீர்நாமத்தை ஒருநாளாயிலேயுஞ் சொல்லும்படியா யறிந்ததேயில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று. ௩௫

ஆளாகிநின் னிருநாவெழுந்தறியாத நாளறிவார் களைக், கேளாதநாள் செவியூறவே கிடையாதநாளதிலாசையே, மூளாதநானிலமீதுதான் முதனாளிலங் கெழுதாதநாள், நாளாகுமோ வாளாயுதா நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஆசாரியனுடைய திருவடிகளுக்கு ஆளாகித்தேவரீருடைய திருமந்திரத்தையறியாத நாளும் தெரிந்தபாகவதரைக் கேளாதநாளும் செவிகளிலே யூறும்படியாய்ப்பொருந்தாதநாளும் அதிலேஆசையானதுபெருகாதநாளும் அஞ்சாவதுவயதில் முதல் நாளிலேபள்ளிக்கூடத்தில்அரியென்றுகிலவெழுத் தாகிலும் எழுதிவையாதநாளும் பலநல்லநாளாகுமோவாளாயுதத்தையுடையஸ்ரீமந்நாராயணா எ-று.

வீட்டுக்குள்ளே துணையாவதும் வெளியிற்குளே து
ணையாவதும், கூட்டுக்குள்ளே துணையாவதுங் குன்
றுக்குள்ளே துணையாவதும், காட்டுக்குள்ளே துணை
யாவதுங், கடலுக்குள்ளே துணையாவதும், நாட்டுக்
குளே துணையாவது நாராயணா நாராயணா.

(இ-ள்.) வீட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனு வெளியினுக்குள்ளே துணையாயிருப்பவனும் சந்திரனுக்குள்ளே துணையாயிருப்பவனும் மலையினுக்குள்ளே துணையாயிருப்பவனும் காட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனுங் கடலினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நாட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நீயேயன்றிவேறில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று.

வாய்க்கின்றதேன் புகையுண்ணலா மணக்கின்ற
சாந்தரையுண்ணலா, காய்க்கின்றமா வெறியுண்ண
லாங்கறக்கின்றவர்க்கட்டுண்ணலாம், தோய்க்கின்ற
பால்கடையுண்ணலாஞ் சுவைகெட்டமானிட வாலி
லாம், நாய்க்கிந்தவாதனையேனையா நாராயணா நா
ராயணா.

(இ-ள்.) தேன்கூண்டினுக்குப் புகைத்தலுஞ்சந்தனக்கட்டையினுக்குத் தேய்த்தலும் பழுத்தமரத்தினுக்கு கல்லெறிதலுங் கறக்கும்பசுவினுக்குக் கயிறணைத்தலுந் தோய்த்ததயிரினுக்கு மத்தாலுடைத்தலும் இவைகளுக்கிந்த உபத்திரவமுண்டாகில் பிறருக்குபகாரமாகும் உரிசையும் வாலுமில்லாத மானிடமென்னும்நாயினுக்கு இந்தவாசனையைக் கொடுத்தீரோ இதனாலே உமக்கென்ன பிரயோசனமுண்டு தெரியச்சொல்லும் ஸ்ரீமந்நாராயணா எ-று. ௫௮

தும்பிக்கையானையுமைவர்முன் றுகிலோடிவாடி
யநங்கையும், கம்பிக்கையாமகயோகருங் காநிற்கவே
சதுர்வேதியன், கம்பி கையா லானுக்குநீகனியைய
மிட்டினியயமேன், நம்பிக்கையாகிய தெய்வமே
நாராயணா நாராயணா.

(இ-ள்.) கஜேந்திரனையும் பாண்டவரையும் வஸ்திரம்நீங்குமென்று வாடினதுரோபதையையும் ஸ்தம்பிதமாயிருந்து தவம்பண்ணுகின்ற மகத்தாகிய யோகிகளையும் இரட்சித்திருக்கட்டும் நான்கு வேதத்தையுமுடைத்தாகிய பிரமனுடையசிரத்தைக் கிள்ளின சிவனுக்குப்பிச்சையிட்டுச் சாபத்தை தீர்த்தபிற்பாடும்இனிபரத்துவம்வேறேயென்றுஐயப்படலாமோ நம்பிக்கையான தெய்வம்நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று. ௩௯

பாலாவதோ தேனாவதோ பழமாவதோ பாகாவதோ மேலானசர்க் கரையாவதோ விரையாருநல்லமுதாவதோ, கோலாகலப்பிணிதீரவே குளியங்களாவன மூலியோ, நாலாவதோநின்பேர்சொலாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடையதேகத்திலே கோலாகலஞ்செய்யாநின்ற நோயைத்தீர்க்கும்படியானதேவரீருடைய திருநாமமானது பாலாகியதோ தேனாகியதோ பழமாகியதோபாகாகியதோ மேலாகிய சருக்கரையாகியதோவாசனைசேர்ந்தநல்லமிர்தமாகியதேவானமூலிகையாகியதோ இவையல்லாமல் மணிமந்திரம் அவிழ்தம் இவைமூன்றுக்குமேலாகியஎன்னென்றுசொல்லுவோம் ஸ்ரீமந்நாராயணா எ-று. ௪௰

பூவுக்குநல் லதுசொல்லவோ பொலிசீதளப் புதுவாசமே, தேவுக்குநல்லதுசொல்லவோ செவியார்முனையெதிர்நிற்பதே, ஆவுக்குநல்லதுசொல்லவோ வதுசாதுவா யமுதீவதே, நாவுக்குநல்லது சொல்லவோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) புட்பங்களுக்குள்ளே நல்லதுசொல்லவேண்டுமானால் காந்தியுங்குளிர்ச்சியும் புதியவாசனையும்உண்டாகிய புட்பமேயன்றிவேறில்லை தெய்வங்களுக்குள்ளேநல்லது சொல்லவேண்டுமானால் முறை

யத்தைக்காதிலே கேட்குமுன்னமே அடியார்களுக்குப் பிரசன்னமாகிய தெய்வமேயன்றிவேறில்லைபசுக்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் அதுவெகுசாதுவா யமுதத்தைக்கொடுக்கும் பசுவேயன்றிவேறில்லை நாவுகளுக்குள்ளே நல்லதுசொல்லவேண்டுமானால் தேவரீருடைய திருநாமத்தைச்சொல்லியநாவேயன்றிவேறில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று.

ஆனந்தமா யழுவார்முனேமலர்சூடியே தொழுவார்முனே மோனந்தனிற்கரைவார்முனே முகில்வண்ணமேவ புகழ்வார்முனே, தானந்தவம் புரிவார்முனே நானென்செய்கேனிவையொன்றிலேநாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீருடைய திருவடியைநினைத்து ஆனந்தபாஷ்பங்களைக்கண்களிலே பெருகுவார்களுக்குமுன்னே புட்பங்களையலங்காரஞ்செய்து தண்டஞ்சமர்ப்பிப்பார்களுக்குமுன்னே மௌனத்தியானத்தினாலே உள்ளங்கரைந்திடுவார்களுக்கு முன்னே பசுங்கொண்டலே யென்று புகழ்ந்திடுவார்களுக்குமுன்னே தானங்களுந்தவங்களுஞ் செய்திடுவார்களுக்குமுன்னே சரணாகதிசெய்திடுவார்களுக்குமுன்னே அடியேன் இவைகளிலே ஒன்றாகிலும்செய்ய மாட்டேனே ஸ்ரீமந்நாராயணா எ-று. ௬௨

செரிக்கின்றவூணுகர்வேனலேன் சிரிக்கின்றகாரியமேசெய்வேன், கரிக்கின்றகண்படையேன் வெறுங்கழப்பன்கொடுங்கவஞ்சகன், பரிக்கின்றநின்னடியாரொடும்பழகேனலேன் படர்வந்தபின்நரிக்கின்றனே னினியென்செய்வே நாராயணா நாராயணா.

(இ-ள்.) சீரணமாகும்படியான ஆகாரத்தைச்சொள்ளாமல் நகைக்கும்படியானகாரியமேசெய்து தெரிசன அபேட்சையானகண்ணையும்படையாமல் அன்பைப்பரிக்கின்ற அடியாருடனேயுங்கூடாமல் வி

ருதாவாகிய கழப்பனாகவும் பொல்லாதவிஷம் போலும் வஞ்சகனை உத்தரித்துத்துன்பம்வந்தபிற்பாடு அவதியைக் கொள்ளாநின்ற நாயினே னினியென் செய்வேன் ஸ்ரீமந்நாராயணா எ-று. சங

ஆதாரதேவதையென்பனோ வடியேனையாளாசென்பனோ, ஓதாதுணர்ந்திடவன்புகூ ருபதேசதேசிகனென்பனோ, மாதாபிதாவுடலாவிநீ மனைகாணிபொன்வலிசெய்வநீ, நாதாவுநீ தாதாவுநீ நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஆதாரமாகிய தேவதையே யென்பனோ அடியேனையாளுங் கர்த்தனேயென்பனோ பலநூல்களையோதாமல் தன்னிலேயறிந்திட நட்புசெய்யாநின்ற உபதேசகுருவேயென்பனோ என்னென்றுசொல்வேன் தாயுந்தந்தையுந் தேசமும் உயிரும்பெண்சாதியுங் காணியுந் திரவியமும் வலிமையுஞ் செல்வமும் நாதனும்பிரபுவும் நீயேயன்றிவேறில்லை ஸ்ரீமந்நாராயணா எ-று. சச

வடுநிந்தையேனிடுவந்தியேன் மருள்விஞ்சினே னருளஞ்சினேன், அடுசிந்தையேனெடுவிந்தையேனலை பண்பினே னுனைநம்பினேன், விடுவதன்பிலேமுடுகலன்பிலேன் வினைமண்டிலே னுனையண்டினேன் நடுவொன்றிலேமிடைகுன்றுமோ நாராயணாநாராயணா

(இ-ள்.) குற்றம்பொருந்தியநிந்தையையும் இடுவெந்தியையும் மிகுந்த மயக்கத்தையும் அருளில்லாத பொல்லாதஇருதயத்தையும்பலவிததுர்நடத்தையும் காரியமென்கிற அலைச்சலையுந் தீவினையையும் இவைகளைக் கொண்டிராநின்ற நாயினேன் இரக்கத்திலே பயந்தவனாகி அன்பிலேதுரிதமில்லாதவனாகி ஒழிவில்லாமல் தேவரீரையடைந்தேன் மத்தியிலே யின்னமொரு விதந்தினாலே எனதுவருத்தம் நீங்குமோ ஸ்ரீமந்நாராயணா எ-று. சரு

குடிநீர்கொமர் முகவேதிமர் குடவெண்ணெயை வடிபிர்பிரம், படிபிர்வெணீறெறிவீர் விழிக்கதிகோ

ரவஞ்சனமேயிடர், கடியீர்வயித்தியரால்வரா கமத
டுகுக்குடமிட்டுளே, நடிமீரெனிற்பிணியஞ்சுமோந
ராயணு நாராயணு.

(இ-ள்.) குடிக்கும்படியாய் கிஷாயங்கள் நீர்கொ
டுங்களென்றும்முகத்துக்கு வேதுபிடியுங்களென்று
குடத்திலே எண்ணெயைக்காய்த்துக் கொடுங்களெ
ன்றும் பிரம்புகொண்டடித்து வெளுத்த விபூதியை
யெறியுங்களென்றும் கண்களுக்கு அதிகோரமாகிய
கலிக்கம்போடுங்களென்றும் வயித்தியருக்குக் காட
டித்தீருங்களென்றும் பன்றியும் ஆடும் கோழியும்
பலிகொடுத்துச் சன்னதமாடிப் பாருங்களென்றும்
சொல்லினல் இவைகளாலே நோய்தீர்வதுண்டோ
ஸ்ரீமந்நாராயணு எ-று. சஅ

பிரம்புக்குமுள் ளிடுமாதரைப் பிணிகட்டுநீள் பி
ணியுற்றவென், உரம்புக்குளே யறியாததெனுலக
தெலாமுறைசோதிதோல், வரம்புக்குளே யெலும்பு
க்குளே வழும்புக்குளே தழும்புக்குளே, நரம்புக்கு
ளே புகவெட்கியோ நாராயணு நாராயணு.

(இ-ள்.) முள்ளுகளோடுங்கூடிய பிரப்பம்புதறு
ளுக்குந் தாமரைப்பிணையல்களுக்கும் மிகுந்தநோய்
கொண்டிராநின்ற என்னுடைய நெஞ்சுக்குள்ளே நு
ழைந்தறியாம லிருப்பதென்னே உலகத்திலிருக்கும்
எல்லாவுயிர்கள்தோறும் வாசம்பண்ணுகின்றசோதி
நீயன்றிவேறில்லை ஆதலாலிதுதோலுடம்பும் எலும்பு
பும் வழும்பும்நிணமும்நரம்பும் இவைமுதலியநாற்ற
மானபடியினலே புகுந்தறிதலுக்கு வெட்கமாகிய
தோஸ்ரீமந்நாராயணு எ-று. சக

மன்றுடியேயதிசோபன மழைவண்ணனே விசா
ங்கரா, வென்றுய்செயஞ் செயுமச்சுதா மிகவாழிசே
சவணேசுபங், கன்றால்விளாவெறிந்தாய்பெருங் கல்
யாணமங்கலமாதவா, நன்றுய்வேங்கடநாயகா நாரா
யணு நாராயணு.

(இ-ள்.) கோபிகாஸ்திரீகளுடைய சபையிலேநடனம்பண்ணுநின்றவனே உனக்கதிகசோபனம், மேகவண்ணனே உனக்குவிசயம் முதலையை வென்றவனே உனக்குசெயம்செயம் அச்சுதனே உனக்கு மிகுந்தவாழி கேசவனே உனக்குச்சுபம்கன்றால்விளாங்கனியெறிந்தவனே உனக்குப்பெரிதாகிய கலியாணம்மாதவனே உனக்குமங்களம் வேங்கடநாயகா நீஇத்தன்மையாக நன்றாகயிருக்கவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று. சஅ

இந்தாவெனு வெனதிச்சைநீயெளிதீவையே லிழிவாகுமோ, சந்தானமாமலராலருச்சனைசெய்குவார் தவிர்வார்களோ, வந்தானபேர் துதியார்களோ வசுதேவர்சொற் குறையாகுமோ, நந்தாதபெண்ணகை செய்வாளோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய இச்சையானபடியே இங்கேவாவென்று தேவரீர்எளிதாகப் பலனைக்கொடுத்தருளினால் உமக்குஇகழ்ச்சியாகுமோ கற்பகமலரினாலே அருச்சனைசெய்யாநின்ற தேவர்கள்விட்டுவிடுவார்களோ சந்நிதானத்தில்வந்தபேர்கள் துதியார்களோ வசுதேவருடைய உடைமையிலேகுறைந்துபோகுமோ அழிவில்லாதஸ்ரீமகாலட்சுமிநகைப்பாளா சொல்லும் ஸ்ரீமந்நாராயணா எ-று. சகூ

சிற்றப்பனோதுருவற்குநீதெதிபாண்டனார் பெரியப்பனோ, கற்றத்தைதேவகிதங்கையோ கண்டாகனன்மிதிலேசனோ, சுற்றத்தரோ பெறுவோரெலாந் தொடுவேன்வழக் கிடுவேன்விடேன், நற்றப்படும் பொருடந்துபோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீர்முன்னாளையிலே இரட்சித்தபேர்களுக்குள்ளே துருவமகாராசனுக்கு நீசிற்றப்பனோ ததிபாண்டனென்னும் குயவன் உமக்குப்பெரியப்பனோகல்லுருவம்போக்கிக்கிளிபோலபேசப்பண்

ணுமின்ற அகலிகையானவள்தேவகிக்குத்தங்கையா கியஉமதுசிறியதாயாரோ கண்டாகன்னென்னும்வி ரோதியானவன் உமக்குப்பெண்கொடுத்த மிதிலைச் சனகமகாராசனாகிய அம்மானோ இன்னம்பேறுபெ ற்றபேர்களும் பெறும்பேறுகளும்உமக்கு உறவின் முறையார்களோ ஆதலால்சம்பந்தமில்லாத பேரை யெல்லாம் இரட்சித்தபடியினாலே தேவரீருக்கும் அ டியேனுக்கும் வழக்குவிடுவதில்லை ஆசைப்பட்ட ப லனைகொடுத்து அப்புறம் போகவேண்டுமே யன்றி போகக்கூடாது ஸ்ரீமந்நாராயணா எ-று. ௫௰

தன்னெட்டெழுத் தயன்மத்தகந்தனிலே பொறி த்தடிநாவிலே, உன்னெட்டெழுத் தெழுதாமையா லுலகத்துளோ ரவனைத்தொழார், கன்னெட்டிடத் தருநெட்டிடக்கன்னெட்டிடக்கனகாலிபின்நன்னெ ட்டெலாந் தொடர்பாதனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பிரமதேவனானவன் உலகத்திலே யுள்ள மானிடர்களுடைய தலைகளிலேதனது நெட்டெழு த்தைமாத்திரம்எழுதி அடிநாவுகளிலே தேவரீருடை ய அஷ்டாட்சரத்தை யெழுதாமற்போன படியினா லே அவனைஒருவருந்தேடுகிறதேயில்லை முல்லைநிலத் திலே கல்லுகள்நெட்டிடவும் விருட்சங்கள் நெட்டி டவும் அக்கினிகள்நெட்டிடவும் விஸ்தாரமாகிய பசு க்கள்பின்னாலே நன்மைபெறநெடிதான தூரமெல் லாம் நடந்தருளாநின்ற திருவடியையுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. ௫௧

உரலுக்குமோ ருறுபஞ்சமோ வுனைநச்சினேனெ னையசசமன், விரலிட்டுதேர்வினைவல்லனோ விதிகை க்குமவ்விரலோசையால், பொரலுற்றநோய் கழல ப்பணைப்புதிதாமருந் தொருதூதனல், நாலைக்குளா ய்வரவேண்டுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) குத்தாநின்ற உரலினுக்கு ஒருகாலத்தி லேயும் தரித்திரம்வருவதில்லை அத்தன்மைபோலத்

தேவரீரிடத்திலேகிரம்பிய ஐசுவரியமேயன்றியில்லா ததில்லையே ஆதலால்உம்மிடத்திலே இச்சைகொண்டேன் இனிஎன்னை அந்தயமனுனவன்விரல் விட்டுக்காட்டியறிந்து வினைசெய்யமாட்டுவனோ பிரமாவினுடையகைகளிலேயிராநின்றவிரலும் என்றலையிலே எழுதஅசையமாட்டாது வருத்தத்தைச் செய்யாநின்றநோயைத் தீரும்படியாய்செய்வதற்கும்புதிதாய் ஒப்பில்லாதசஞ்சீவியானது ஸ்ரீயனுமாராலேவரவேண்டுமோ க்ஷீராப்திவாசனுகிய ஸ்ரீமந்நாராயணு.

சமையாதிதே வதையென்பதுஞ் சமையாதிநின் பெயரென்பதும், உமையாளுடன்பரமன்புரிந்துனை மாமறைப்பொருளென்பதும், தமையாள்வதென்றிமையோர்திலோத் தமைபாதியுன்புகழ்கின்றதும்,ந மையாமலேயெனையாளுவாய்நாராயணு நாராயணு.

(இ-ள்.) சமயங்களுக்கெல்லாம்அதிதேவதைநீயேயென்றும்,மரணசமையத்துக்குஆகியதுஉம்முடைய பெயரேயென்றும்,மகத்தாகியவேதப்பொருள்நீயேயென்றும், உமையவளுக்குச்சிவன்புரிந்து நிச்சயம் பண்ணினதும் தேவதைகளுக்குந் திலோத்தமைக்கும் அதிபனுகிய தேவேந்திரன்தங்களை இரட்சிக்குங்கர்த்தனேயென்று புகழ்கின்றதுங் கெடாமற்படி என்னை இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணு எ-று.	ருந

நீயண்டராலடிபட்டநாணினைவில்லைநின்னுதரத்துளே, போயண்டகோடியிலெந்தவோர் பரையிற்குளே விளையாடினேன், மாயங்கடந்தறிவேனலோ வரதன்கெடீர், வானோர்க்கெலாம் நாயன்கெடீர் விடுமென்பனோ நாராயணு நாராயணு.

(இ-ள்.) தேவரீர் அசோதைமுதலாகிய இடையராலேஅடிபட்டநாளையிலே அடியேனுக்கு நினைவில்லாமற்போயது அதுஎதனுலேஎன்றால் உமதுகுட்சிக்குள்ளேயிராநின்ற அண்டகோடிகளிலே எந்தசத்

துக்களுக்குள்ளேயோ விளையாடினேன் நீர்செய்யும் மாயம்நீங்கி யறிந்தேனேயானால் தேவதைகளுக்கெல்லாமும்மைவரதனென்றும்நாயகனென்றும் அந்த இடையர்களுக்குத் தெரியப்படச்சொல்லி கெடுவீர்கள் விட்டுவிடுங்கோளென்றுநீக்கிவிடுவேன் திருமேனியென்னமாக நொந்ததோ இப்போது பெரியோர்களையறிந்தேன் இருந்துஞ்சமயத்திலேஉதவாதே போனேன் இனிவருந்தி என்னபிரயோசனம் ஸ்ரீமந்நாராயணா எ-று. ருச

காசிக்குளுங் கயையிற்குளுங் கழியாத பாதகனு
மையால், கூசிக்குலைந் தனைவந்தியேன் குறையாகு
மோவினையென்பதோர், வாசிக்குவந் தருள்செய்கு
வாய்வயிரத்திரா வணன்றங்கைதன், நாசிக்குவாளெ
றியையனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) காசியினிடத்திலேயுங்கயாவினிடத்திலேயும் வாசம்பண்ணினாலும் நீங்காத பாவியானபடியினாலே மனதுகூசிக்குலைந்துதேவரீரைத் தோத்திரம் பண்ணாமல் விட்டுவிட்டேன் அதினாலேஉமக்குக் குறைவாகுமோ அடியேனுடையவினையென்னும்வாசி தீரும்படியாய்வந்து கிருபைசெய்தருளவேண்டும்முன்னாளிலேவயிரத்தோடுங்கூடிய இராவணன்தங்கையாகிய சூர்ப்பனகையினது மூக்கறும்படியாய்ச் செய்த வாளாயுதத்தையுடைய ஸ்ரீமந்நாராயணா எ-று.

தாளுக்கவாவிய நாவினுஞ்சலியாது வாசனியான
நோய், ஆளைக்கெடா தின்றைக்குவா வசையாமலே
யன்றைக்குவா, தோளுக்குவாளியைசெய்தவன் றுய
ர்கண்டிராவணவின்றுபோய்நாளைக்கு வாவெனுமை
யனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீருடைய திருவடிகளுக்கு ஆசைகொள்ளாநின்ற எனதுநெஞ்சிலேயும்நாவிலேயும் வருத்தமில்லாமல் வரவேண்டுஞ் சனியான நோயானது அடிமையைக்கெடுத்துவிடாமல் இன்றைக்கேவர

வேண்டுஞ் சரமதிசையிலேயமனைக்கண்டு சஞ்சலிக்குமுன்னமே அன்றைக்குவரவேண்டும் முன்னாளையில் பாணங்களைத் தோள்களிலேயழுத்தும் படியாய் எய்துஅவனது துயரத்தைக்கண்டு வயிரத்தையுடையராவண நீஇன்றைக்குச்சென்று நாளைக்கு வாவென்று கிருபைபண்ணுகின்ற என்னையனாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. ருசு

விக்கற்கிடம் பொருமற்கிடம் விடுமூச்சுமேலெழுதற்கிடம், கக்கற்கிடமிருமற்கிடங் கருதற்கிடந்திருகற்கிடம், சொக்கற்கிடங் குளிர்தற்கிடஞ் சுடுதற்கிடம் வெருவற்கிடம்,நக்கற்கிடந்தருமையனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) விக்கலென்றும் பொருமலென்றும் மேல்மூச்சென்றும் கக்கலென்றும் இருமலென்றுங்கருகலென்றும் திருகலென்றுஞ் சொக்குதலென்றும் குளிர்தலென்றுஞ் சுடுதலென்றும் பயப்படுதலென்றும் நக்கலென்றுஞ் சொல்லாநின்ற அந்தப் பீடைகளுக்கெல்லாம் இடங்கொடுத்திராநின்ற தேகத்தையுடைத்தாகிய அடியேனை இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று. ருஎ

துளசிதளத் துளசிதளத் தூய்நீரதே குடிநீரதாம் உளதாயிரம் பெயரெண்ணுநூற் றொருகோடிமந்திரமேலதாம், வளமார்பின்மா மணியென்னவே மணியாமெனைப் பிணியென்செயும், களகூபரன்பகைவென்றவா நாராயணா நாராயணா.

(இ-ள்.) திருத்துழாயினது தளங்களிலேபொருந்துங்குளிர்ந்தநீரே குடியிருக்குங்கிஷாயங்களுக்கெல்லாம்மேலாகிய கிஷாயநீராகவும்நிலைபெற்றிராநின்ற ஆயிரந்திருநாமங்களும் நூற்றொருகோடி மந்திரங்களுக்குமேலாகிய மந்திரமாகவும் வளம்பொருந்தாநின்ற திருமார்பிலேயிருக்குங் கவுஸ்துவமணியே மணிகளுக்கெல்லாம் மேலாகியமணியாகவும் இருக்கின்ற ஆராயுமிடத்தில் இதுவேமணிமந்திர அவுஷத

மாகவிருக்கப் பிணியானது அடியேனையென்னசெய்யும் நளகூபரனுடைய சாபத்தைத் தீர்த்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா எ-று. ௫அ

சுவையோசையூறொளிமாமணந் தொடராமனஞ்
சுழல்கொண்டையும் கவைமானுமானை விட்டிலுங்க
ளிவண்சிமே விளிகின்றபோல், இவைதூயவென்றீ
னிதூண்டிலே னினியென்செய்வேன், நவைதீரமேய
ருள்செய்குவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஆகாரவுருசையினாலே கொண்டையும் மணியோசையினாலே கிளைமானும் தேகபரிசத்தினாலே ஆனையுந் தீபப்பிரகாசத்தினாலே விட்டிற்பூச்சியும் வாசனையினாலேமதத்தவண்டும் இவைஐந்தும் மனந்தொடர்ந்துகழன்று விழுந்திறந்துபோவதுபோலே எனதுபஞ்சஇந்திரியமும் இதுநன்மையென்றும் இதுதீமையென்றுந்தெரிந்து புசிப்பதில்லைஇனியென்செய்கேன் இந்தக்குற்றந் தீரும்படியாய்க் கிருபைசெய்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று.

நெட்டேணியின் படியெட்டுமோ நின்னெட்டெ
ழுத்தெழி லண்டமேல், எட்டாமெனும்பத மெட்ட
வே யிரதித்தசர்க்கரையேயதின் வட்டேபசும்பழ
மேசதா மதுரித்தவா ரமுதேயெனுள், நட்டேயரு
ட்புனல்காட்டுவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) மூங்கில்களாலே நெடிதாயமைத்திராநின்ற ஏணியினதுபடிகளிலேயேறினால் பரமபதம் எட்டமாட்டாது ஆதலால் ஏழுஆபரணத்தோடுங் கூடிய அண்டத்துக்குமேல் எட்டாவதாகிய அந்தப்பரமபதத்துக்கு ஏறிவர உபாயமுண்டு அதுயாதெனில்நினது திருமந்திரமாகிய எட்டெழுத்தையும் எனதுநெஞ்சிலேநட்டு இரம்மியமானசருக்கரையுங் கற்கண்டுங் கனிந்தமுப்பழமும் நித்தியமதுரமாகிய ஆராவமிர்தமுமிவைகளுடைய சுவைபோலே ரவும்படியாகக் கிருபைப்புனல் கட்டினால் ஏறிவருவேன் ஸ்ரீமந்நாராயணா எ-று.

காணுங்கணே குவியுங்கையே கருதுள்ளமே கலை லாஞ்சனம், பூணும்புயம்புளகாங்கமேபுகழ்நாவதே திகழ்கேழ்வியே, ஆணும்பெணுஞ்சர ணென்பதேயு வையல்லநா னபராதிகாண், நாணும்பெயர்க் காதா ரமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீர் திருவடியைக் காணுகின்ற கண் களுங் குவியாநின்றகைகளும் நினையாநின்ற உள்ளங் களும் மந்திராக்கினிபொருந்திய சங்குசக்ரவாஞ்ச னம்பூணுகின்ற புஜங்களும் புளகங்கொள்ளாநின்ற தேகங்களும் புகழாநின்றநாவுகளும் கேட்காநின்ற செவிகளும் இவைகள்பொருந்திக் குடும்பத்துடனே சரணாகதிபண்ணுகின்ற அடியார்களைப்போலப்பொ ருந்தினநானல்ல மிகுந்தஅபராதத்தை யுடையவன் ஆதலால் தரிசனம்பண்ண வெட்கத்தை யடைந்தே ன், இத்தன்மையாம் வெட்கத்தையடைந்த பேர்க ளுக்கெல்லா மாதாரமாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று.

கவிநல்லதோ கவிதீயதோ கனமூடனுன் விதைவி த்திடும், புவிநல்லதேல் விளையெய்துமே புகழ்நல்ல தேல் புகர்கேட்கவென், செவிநல்லதேலருணல்லதே செயனல்லதே, லியநல்லதே நவிநல்லதே வரிநாவி லே நாராயணா நாராயணா.

(இ-ள்.) மிகுந்தமூடனுனவன் பாடாநின்ற கவி தையானது நன்மையாயதோ தீமையாயதோ தெரி யவராது விதைக்காநின்ற விதையானது பூமிநல்ல தானபடியினுலே விளையுமேயன்றி விளையாமற்போ வதில்லை ஆதலாலுமதுபுகழுங்கிருபையுஞ் செயலும் இயலும் நல்லதானபடியினுலே அதையென்காதிலே கேட்டு நாவிலேதோத்திரம்பண்ணினுல்நன்மைவரு மேயன்றித் துன்பம்வருவதில்லை ஸ்ரீமந்நாராயணா.

பசைகொண்டபா கவதாகமம் பருகாதுகா துரு காதுநெஞ், சசைகொண்டபா தகநீரிலே யமிழ்வே

இந்தச்சம்சாரமாகிய சுமையை சுமக்காநின்ற புருஷன் அச்சுதனிருக்கையாலே அந்தச் சுமைகளைத் தாங்கநமக்கென்ன காரியமென்று அறிவாளர் சந்தோஷிப்பார் ஸ்ரீமந்நாராயணா எ-று. ௬எ

பசுகட்குமா யிணைபாடியிற் பலபாடியாடியுமாயர்தம், சிசுகட்குமா யிணைமைந்தனுய்த் திருட்டுக்குமாயினையன்றுதான் முசுக்கட்குமாயிணைநாயினேன் முசிப்பிக்குமாயருள்பூணையே, நசிக்கிப்பின்வாசனை கொள்வரோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) ஆயர்பாடியிலேயிராநின்ற பசுக்கூட்டங்களுக்கு இராட்சதகர்த்தாவாகியும் இடைப்பிள்ளைகளுக்குப்பாடலுடனே ஆடல்காட்டியுஞ்சிறுபிள்ளையாகிய வெண்ணெய்திருடுந்தொழிலுக்கு இசைந்ததுமல்லாமல் முன்னாளையிலே குரங்குகளுக்கு நேசமாகி இரட்சித்ததேவரீர் நாயினேனுடைய தளர்ச்சிக்குக் கிருபைபண்ணமல் புட்பத்தைநசுக்கி முகர்வாரைப்போல உபேக்ஷைபண்ணலாமோ ஸ்ரீமந்நாராயணா எ-று. ௬அ

குலங்காணவே குடிகாணவே குணங்காணவே பழுதாயினும், பலங்காணுநின்னடியாரெனிற் பவசாகரப்ர பென்னுளங், கலங்காமலே கலங்காணுமே கழலாமலே கழல்காணுமே, நலங்காமலே நலங்காணுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) குலவண்மையுங் குலத்தின்நிலைமையுங்குணப்பெருமையும் இவைகளைக்காணுமிடத்தில் பழுதாயிருந்தாலுந் தேவரீருக்கு அடிமைப்பட்டார்களேயானல் மேன்மைபெறுவார்கள் ஆதலால்பாவசமுத்திரப் பரப்புக்குள்ளே என்னுடையநெஞ்சமானதுகலங்கி ஒதுங்கி நலங்காமல் நலங்காணும்படியாய்க் கப்பலைப்போலே திருவடி காட்டவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று ௬௯

ஈன்றோனுநீ யலனானுமவ் வியலுந்திவண் டினனைல்லினிற், பொன்றோனெவன்பெறுபிள்ளையைப்போ

போபிதா வினவாதிரான், சான்றோர்முனே யினி
நோயைநீ தவிராயெனிற் சபதங்கெடும், நான்றோ
ரைவீசியவாளனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) என்னைப்பெற்றவனும்நீயல்லவோ நானு
ம்அருமையான இயல்பொருந்திய உமதுஉந்தியிலே
யிருந்தவனுமல்லவோ உம்மைப்போலே எவரிருக்
கிறார்கள் போபோ பிதாவானவன் பெற்றபிள்ளை
யை வினவாதிருப்பானோ. பெரியோர்கள் முன்பாக
என்னுடையநோயை இனிதீராமற் போனீரானால்
உமதுசரணாகதி சம்ரட்சணையென்கிறநெறிகெட்டுப்
போகும் பகைஞரைவீசிய வாளாயுதத்தை யுடைத்
தாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. ௭௰

கஞ்சப்பதந் தனையங்ஙனே கட்டிக்கரைந் தவசத்
தராய, நெஞ்சத்துநா ரணவென்றுதானியமித்து நி
த்திரைகொள்ளுவார், கொஞ்சத்தைநின் றளவாக்
குவாய் குணபத்தைவாழ் குடியாக்குவாய், நஞ்சத்
தையாரமுதாக்குவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) தேவரீருடையதாமரைபோலுந் திருவடி
யை உள்ளத்திலேநினைந்து ஞானக்கயிற்றினாலேஅங்
ஙனேகட்டிக் கரைந்துருகில் பரவசத்தையடைந்து
ஸ்ரீமந்நாராயணனேயென்று நிச்சயம்பண்ணி ஆன
ந்தநித்திரை கொள்ளுவார்கள் துரும்புபோலேயிரு
க்காலும் அவர்களை மகாமேருவாகச் செய்தருளு
வாய் அதுவுமல்லாமல்புழுக்களை ஐஸ்வரியத்தையுடை
த்தாகிய குடும்பங்களாகவும் விஷத்தை அமிர்தமா
கவுஞ் செய்தருளாநின்ற மகிமையையுடைய ஸ்ரீமந்
நாராயணா எ-று.. ௭௧

எழிநெட்டிருப் பருமேனிவந் தென்னைக் ககப்ப
டுமென்றுநான், தழுவிக்கொளக் திரிகின்றதென் ச
லசக்கரா சரமாகுநீ, வழுவிக்கொடங் கிங்கோடியே
வாநல்லமுன்வரவஞ்சியே, நழுவிக்கொடே திரிகின்
றதென் நாராயணா நாராயணா.

(இ-ள்.) நெடியதாய்வளர்ந்திராநின்ற உமதுபரு த்ததிருமேனியானது எனதுகைக்குள்ளே வந்தகப் படுமென்று நான்தழுவிக்கொள்ளத் திரிந்திட்டால் சகலசராசரங்களாகிய தேவரீர் என்முன்னேவந்து வரத்தைக்கொடுக்கப் பயந்தோ அங்குமிங்குமோடி வழுவிக்கொண்டும் நழுவிக்கொண்டுந் திரிகின்றதெ ன்சொல்லும் ஸ்ரீமந்நாராயணா எ-று. ௭௨

எனைக்காக்கநீ வரன்மேன்மையென் றிருப்பாய் பராக் கதுமுண்டுநின், தனைக்காத்தவா கனவில்லை யோ தகுசேனைகாவலனில்லையோ, நினைக்காத்தசே டனுமில்லையோ நினைவில்லையோ விமையோர்பிரா, ணனைக்காத்தமா ருதியில்லையோ நாராயணா நாரா யணா.

(இ-ள்.) அடியேனை இரட்சிக்கவருதல் மேன்மை யென்றெண்ணியிருப்பீர் இருக்குமெண்ணத்தில் ப ராக்குவந்ததோ அல்லதுதேவரீருக்கு வாகனமாக வுந்துணையாகவுங் காத்துக்கொண்டிராநின்ற கருட னுஞ்சேனைக்காவலனும் ஆதிசேஷனுந் தேவர்களா கிய வானவர்களுயிரை இரட்சிக்க சஞ்சீவிகொண்டு வந்த அனுமானாகிய விவர்களில்லாமற் போனார்க ளோ அல்லது திருவுள்ளத்தில் ஞாபகமில்லையோ சொல்லும் ஸ்ரீமந்நாராயணா எ-று. ௭௩

கண்பொன்றுகோ மகன்மாற்றவன் கடுகொத்த பொய்க் கிருள்பார்த்ததோர், பண்பொன்றுநா லு ரைசெய்யநான் பலபொய்ச்சலால் விளையாடினேன் மண்பொன்றுநீ ரனல்பொன்றிவிண்வளி பொன்று வே வருமன்றுநின், நன்பொன்றுந்தரல்வேண்டுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) கண்பார்வைபோன திருதராட்டிரன் கு மாரனாகிய துரியோதனனுக்குப் பகைவனான தர்ம ராசன் கடுகளவுபொய்சொன்னதினாலே யிருள்சூழ் ந்த நரகத்தைப்பார்த்தானென்றுரைப்பில்லா நபன்பு

பொருந்தியசாஸ்திரஞ் சொல்லச்செய்யும் நான் அநேகமான பொய்களைவிளையாட்டாகச் சொல்லினேன் ஆதலால் எனக்கென்னகதியோ தெரியவராது பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் இந்தப்பஞ்சபூதங்களுந்தேவர் சூழ்ச்சியில் அடங்குங்காலத்திலே அடியேனும்வந்துசேருவேன் அப்போதாகிலும் உமதுநன்பொன்று மாத்திரம் வைத்து இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா, எ-று. எச

போகேந்திரன் சிரமேந்துநின் பூதேவிபுல் லரையேந்தவே, ஆகேனென வுரைசெய்வளா லடியேனையேத்துகைவேண்டுவாய், மாகேந்திரன் றனதம்பியே வடவேங்கடா சலவள்ளலே, நாகேந்தியே நகமேதியே நாராயணா நாராயணா.

(இ-ள்.) சர்ப்பங்களுக்கு இராசனாகிய ஆதிசேஷன்முடிகளிலே ஏந்தாநின்ற உமதுதேவியாகிய பூமிதேவியானவள் பாபிகளைத்தாங்குதற்கு வருத்தமாயிருக்கிறதென்றுதேவரீருடையதிருச்செவியிலே விண்ணப்பஞ்செய்தருள்வாளாகில் அடியேனைமாத்திரந் தாங்கிக்கொள்ளும்படியாய் வேண்டிக்கொள்ளவேண்டுந் தேவேந்திரனுக்குத் தம்பியாகவுந்திருவேங்கடமலைக்கு நாயகனாகவும்பொருந்திப் பாஞ்சன்னியத்தையுங் கோவர்த்தனகிரியையும் ஏந்தியருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா எ-று. எரு

ஊழிற்பிறந்திடுபாவநோ யுடலைத்தொடா வகைதந்திடாய், வாழிக்குநாயகனிந்திரன்மனுவின்பதம்பெறவிச்சியேன், ஆழிக்கையுன்கொடைமிக்கதென்றடியேன்மிகப் பெறலாகுமோ, நாழிக்குடங் கலங்கொள்ளுமே நாராயணா நாராயணா.

(இ-ள்.) இகத்திலே மனுச்சக்ரவர்த்தியினுடைய பதமும் பரத்திலேவாழ்வுக்கு நாயகனாகிய இந்திரனுடையபதமும் இச்சையாகவேண்டுவதே யில்லை ஆதலால் ஊழ்வினையினாலே பிறந்திடாநின்ற பாவநோயானது அடியேனுடைய தேகத்திலே சேராவ

கைசெய்தருளிப் பரமபதத்தைத் தேவரீர் கடாட்சி த்தருளவேண்டுந் திருவாழிதரித்த திருகரத்தையு டையவனே உம்மிடத்திலேமிகுந்த தியாகம் உண் டென்று நானிச்சைகொண்டதினாலே மிகுந்துவரு மோ என்பிராப்தி எவ்வளவோ அவ்வளவுமுடியும் அதுளத்தன்மைஎன்றால் நாழிக்குடத்தைக் கொண் டுபோய்ச் சமுத்திரத்திலே யமிழ்த்தினால்நாழிகொ ள்ளுமேயன்றி கலங்கொள்ளுவதில்லை ஸ்ரீமந்நாரா யணா எ-று.

௭௬

தனுவுக்குளே யுளராறுபேர் சலிகைக்குநாயகரு ன்னைநான், பணுவற்சொலாவகை தட்டுவார்பழகிச் சதாநெறிகட்டுவார், அனுவுற்றசோரரையெற்றியே யடியேனையாளாசென்னவே, நணுகிக்கொடே திரிகி ன்றனன் நாராயணா நாராயணா.

(இ-ள்.) என்னுடைய தேகத்துக்குள்ளே இராநி ன்ற காமம்குரோதம் லோபம்மோகம் மதம்மாச்ச ரியம்என்றுசொல்லாநின்ற இந்தஆறுகுற்றங்களுஞ் சலிகைக்குநாயகராய் நித்தியமும்பழகித் தேவரீரே என்னைத்தும்மிடகவிதைகளாலே பாடாதவகைதொ டுப்பதுமல்லாமல் நன்மார்க்கத்தையுங்கொடுக்காநி ன்றகிரமம்நீங்கிய திருடர்களைக்கொன்று அடியேனை இரட்சித்தருளுங் கர்த்தனேயென்று அடுத்துக்கொ ண்டு திரிகின்றனன் ஸ்ரீமந்நாராயணா எ-று.

உடைச்சேலைதாகுழைக்கோலைதாவுணச்சோறு தா பணப்பேறுதா, கடைப்பூவடாவடைக்காயடா கறுக்காசடா கடைக்கோளனே, கிடைக்கோடிவா முடிச்சேதடாகிறுப்பாவையார்வெறுப்பார்பொலா நடைக்காசையாயிறுத்தேனலோநாராயணாநாராய.

(இ-ள்.) உடுக்கிறதற்குச் சேலைதாடாவென்றுங் காதுக்குப் பொன்னோலைதாடாவென்று உண்கிறதற்கு ச்சோறுதாடாவென்றும்மிகுந்தபணங்களைத்தாடா வென்றுங் கடைப்புஷ்பங்களைவாங்கித் தாடாவெ ன்றும் பாக்குவெற்றிலை தாடாவென்றுங் கறிக்குக்

காசுதாடாவென்றும் கடைப்பட்டகோளனேயென்றும் படுக்கைக்கு ஓடிவாடாவென்றும் அடிச்சோமனிலே முடிச்சேறடா வென்றும் கிருதாகப்பேசி, வெறுத்துக்கொள்ளாநின்ற வேசியருடைய பொல்லாதநடத்தைகளிலே ஆசையாய்த்திரவியத்தை யெல்லாமிழந்துவிட்டு விழலனானேன் ஸ்ரீமந்நாராயணா.

கன்னிப்பெருங்கடலோடுவான்கம்பத்திலே விளையாடுவான், உன்னிக்கொளும்பயமென்னநோ யொருமட்டுநெஞ் சொருமிக்கிலேன்,என்னிற்பயந்தெளிவித்திடா யெல்லோர்க்குமீந்தென்மட்டிலே, நன்னிக்குணம்பிடிபட்டதே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பெரிதாகிய கடலிலேநீந்தவுங் கம்பத்திலேறிவிளையாடவும் பொருந்திய இளம்புத்தியையுடையவன்சென்றபிற்பாடு நினைத்துக்கொள்ளாநின்றபயங்களைப்போலே நோயானதுவருத்தியும் எனதுநெஞ்சு ஒருமித்ததில்லை என்னிடத்தில்உண்டாகியபயத்தை தெளிவித்தருளல்வேண்டும்யாவருக்கும் கிருபைசெய்கிற நீஎன்மட்டுஞ் செய்தருள உமக்குலோபகுணம்பிடிபட்டதோ ஸ்ரீமந்நாராயணா எ-று.

புட்புள்ளவன் கொடியென்னவே பொற்பென்னவன்கலையென்னவே, கட்புண்டரீகமலத்தினேர்கண்ணென்னவே கரைகின்றிலேன், சட்புள்ளவன்சமயத்திலேசலமண்டினேன்சரணண்டினேன், நட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா நாராயணா.

(இ-ள்.) பட்சிரூபமாகிய கருடக்கொடியனேயென்றும்வண்மைபெற்ற சுவர்னவஸ்திரனே யென்றுந் தேனேடுங்கூடியசிவந்ததாமரைக்கண்ணனே யென்றுங் கரைந்துருகாதபாவியானவன் உமதுசமயத்திலே வயிராக்கியம்பொருந்தித் திருவடியடைந்தேன் அடியேனிடத்திலே நேசமோபகையிருக்குமோதெரியவாராது ஸ்ரீமந்நாராயணா எ-று. அய்

கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையார் கடைவநாள்ழிப் படைகோடிகள், கச்சுக்கிடந் திடுநெஞ்சிவிக

ணியம்புதைத் தவருய்வரோ, பிச்சுத்தயாபரனுன் பெருமந்திரந்தனிலாற்றுவாய், நச்சுப்பெருஞ்சுதை வேலையாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) கச்சடங்காமலெழுந்த கொங்கைகளையுடைய கன்னியர் கடைக்கண்பார்வையாகிய ஆயுத கோடிகள் எனதுநெஞ்சிலே தைத்துருவிப் புண்ணாகியது அந்தநோயை என்சொல்வேன் ஒருபாணம் பட்டவர்கள் பிழைப்பதில்லையே ஆதலால்நித்தியபரனுகையினுலே இந்தப்பாணங்களைப்பிடுங்கிப்புண்களை உமதுபெரிதாகிய திருமந்திரத்தினுலே ஆறும்படி செய்தருளவேண்டும் ஆசையுடனேஉயர்ந்த அமிர்தக்கடலிலேயும் ஸ்ரீமந்நாராயணா எ-று. அக

எய்தாரிருந் திடவம்பைநோ மிழிவாளர்போற்பழிபாதகம், செயதாரிருத்திடலன்றியே தெய்வந்தனைச்சிதைவாகவே, வைதாவதென் விதனத்திலே வழிதப்புமே வாய்பாறுமே, நைதாதுவின்பரகாரமே நாராயுணா நாராயணா.

(இ-ள்.) பாணத்தை யெய்தவனிருக்க அம்பை நோகாநின்ற இழிவாளர்போலே பழிபாதகஞ்செய்தநானல்லவோ அனுபவிக்கவேண்டும் அதுவன்றித் தேவரீரைவிதனத்திலே கெடுதலாக வைத்தென்ன பிரயோசனமென்றால் நன்மார்க்கமுஞ் சத்தியமுங் கெட்டுப்போகுமேயன்றிவேறில்லை சரமதிசையிலே நைந்துபோகாநின்ற தாதுவுக்குவைத்தியனுகிய ஸ்ரீமந்நாராயணா எ-று. அஉ

முகிலுக்குளேயடிபட்டவோர்முதுமக்கள் போற்றுனிவிக்குநோய், மிகலற்பமோவிடுவித்திடாய விடதத்தநீர்மடுவுக்குளே, துகிலைக்கொடாய் துகில்விட்டிடாய் தொழவெட்கமேவிமையக்கணர், நகிலுக்குள்வீழ் நகையச்சுதா நாராயணா நாராயணா.

(இ-ள்.) மேகவருஷத்திலடிபட்ட கிழவர்கள் வருத்தத்தை யடைந்து இறக்குமாப்போலேஅடியேனிக்கும்படியாய் துணிந்துசெய்யாநின்ற நோயான

துபெருகுதல் சொற்பமல்லவே ஆதலாலது நீங்கும்படிக்குக் கடாட்சித்தருளவேண்டும்முன்னாளியிலே பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய யமுனாநதியிலே ஸ்நானம்பண்ணுகின்ற கோபஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்துக்கொண்டுபோய்க் கொடாமலும்விட்டுவிடாமலும் நின்றகாலத்திலே அவர்களும் மைத்தொழுதுகேட்க வெட்கத்தையுடையவர்களாய்மைதீட்டிய கண்பார்வையானதுதங்கள்கொங்கையிலே படியத்தக்கதாகத் தலையைக்கவிழ்ந்து கொள்ள நகைத்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா எ-று.

கமலத்தைவந் தயல்வண்டுணுங் கருதாததோகை யொக்கவே அமலத்தநீரிடைவாழினும் மதுபோலவேயயலாரெலாம், நிமலப்பதந்தொழூரிலே நிலைபெற்றிருந்துணவந்தியேன் ஞமலிக்குமோாருள்செய்திடு நாராயணா நாராயணா.

(இ-ள்.) பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய தடாகத்திலேயிராநின்ற தாமரையினுடையபெருமையை அத்துடனேபிறந்த தவளையறியமாட்டாது பக்கங்களிலேயிருந்து வண்டுகள்நின்தேனைச்சாப்பிட்டுச்சந்தோஷத்தையடையுமாப்போலேதேவரீர்நிலைபெற்றிராநின்றஊரிலே அடியேனிருந்துந்தேவரீரைத்தோத்திரம்பண்ணிக் கடைத்தேறவறியேன் அயலிலேஇராநின்ற பிரமாமுதலாசிய பேர்களெல்லாந் தேவரீருடைய பரிசுத்தமான திருவடியைத்தொழுதுகடைத்தேறுகிறார்கள் கடைகெட்டசுவர்னத்துக்கும் கிருபைசெய்தருளின ஸ்ரீமந்நாராயணா எ-று.

என்மாடுவீடென்பிள்ளைபெண்டென் காணிமண்ணென்சொம்மெனும், தன்மாலிலேயறியாதபேர் தனதாகுமோதாணவதார், வன்மாயமென்றது கண்டுநின் வடவேங்கடம்பதிவைகியே, நன்மானுயர்நிலைநிற்பதே நாராயணா நாராயணா.

(இ-ள்.) என்மாடென்று மென்வீடென்று மேன்பிள்ளையென்றும் என்பெண்சாதியென்றும் என்கா

ணிமண்ணென்றும் என்னுடைமையென்றும் தங்கள் மயக்கத்தினால் மூடரானபேர் சொந்தமென்றிருப்பார்கள் அவைகள் தங்களதாகுமோ அவைகளும் இவர்களுக்குச் சம்பந்தமென்ன இவையெல்லாம் வலியமாய்கையென்று தெளிந்து நன்மைபெற்றமானிடரெல்லாந் தேவரீருடைய திருமலையை நித்தியபதார்த்தமென்று நிலைபெறுவார்கள் ஸ்ரீமந்நாராயணா.

பரலோகமும் பரரூபமும் பரபோகமும் பரமாயுவும், சுரலோகமுஞ் சுயரூபமுஞ் சுரபோகமுஞ் சுராயுவும், திரலோகமென் றிவையாவையுந் திருவேங்கடந்தனிலுள்ளதால், நரலோகமே மிகநன்றுகாண் நாராயணா நாராயணா.

(இ-ள்.) பரமபதமுந்திவ்வியதிருமேனியும் நித்தியானந்தமுந்நித்தியதத்துவமற்ற இமையாவர்நாடுமிமையவர்மேனியுமிமையவர் ஆயுளும் இமையவர்போகமும் இமையவர்களுக்குநாயகனாகிய இந்திரனுடையபதவியும் இவைகள்முதலாகிய ஐசுவரியங்களெல்லாந் தமதுதிருவேங்கடத்தை யடைந்த பேர்களுக்கெல்லாமுண்டாகிய தன்மையினாலே இந்தநரலோகமே மிகுந்தநன்மையானது ஸ்ரீமந்நாராயணா எ-று.

அசவாதவன் பழிவேடரா யடியேனுடம் பிணிநோயெலாம், கசவாதுதின்பவர்போலவேகவராமலிங்கருள்கூறுவாய், குசவாயுதாசிறுகோவலாகுறுவேதியாகுலமன்னர்மா, சைவாவியிற்பயிலன்னனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) அசைவில்லாமல் வலியபழியைச்செய்யாநின்ற வேடரானவர்கள் தயவில்லாமல் மிருகங்களைக்கொன்று தின்னுமாப்போலே அடியேனுடையதேகத்தைப் பிணியானது பிடுங்கித்தின்னாமல் இவ்விடத்திற் கிருபைசெய்தருளவேண்டுங் கலப்பையாயுதத்தையுடையவனே இளமையாகிய கோபாலனே குட்டனாகியவாமனனே சூரியகுலமன்னவனே மானச

மடுவிலே விளையாடாநின்ற அன்னரூபமாகிய ஸ்ரீம ந்நாராயணா எ-று. ௮௭

மீன்கூறுமங் கிடிபாதியாண் மிருதங்குறள்பரசா ளிகோ, மான்கூறலா யுதனுயன்மேல் வருவாசியும் பெருவாசியேற், தேன்கூறுமா கமசாரமுஞ் சிறு போகமோ கமசாரமும், நன்கூறுமங்குருபத்தனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) மச்சமென்றும்கூர்மமென்றும்வராகமெ ன்றும் நரசிங்கமென்றும் வாமனமென்றும் பரசுரா மனென்றும் ஸ்ரீராமனென்றும் பலராமனென்றும் ஸ்ரீகிருஷ்ணனென்றும் வந்ததல்லாமல் மேலும்கற் கியாய்வருவதினாலேஉமக்குப்பெரிதாகிய பலனுண் டோ மதுரம்பொருந்திய ஆகமசாத்திரமுஞ் சிற்றி ன்பமாகிய கர்மசாஸ்திரம் நான்குசாரமும் ஓதிவி த்தகுருவாகிய காந்திபருக்குப் பக்தனாகிய ஸ்ரீமந் நாராயணா எ-று. ௮௮

மிறுக்கத்தகா தெனதாவியின் விளங்கிற்குநின்ன ருணெய்யிடாய், பொறுக்கத்தகாதது மெய்யுடல்பு ழுக்கத்தகாதொருபோரிலே, குறிக்கிட்டமோநடுக் கிட்டிடக் குலைவாணனார் திரடோளெலாம், நறுக்கி க்கையோர் துணைவிட்டவா நாராயணா நாராயணா.

(இ-ள்.) அவமாகிய எனதுதேகமானது புழுக்க ங்கொண்டு பொறுக்கத்தகாமல் இறந்துபோகிறது தகுதியானகாரியமல்லவே ஆதலால் உயிராகியவிள க்கானது அவிந்துபோகாமல் தேவரீர்கிருபையாகி ய நெய்யமுதுபெய்தருளவேண்டும் ஒப்பில்லாதயுத் தமுகத்திலே குறுக்கிட்டசிவன்முதலாகியபேர் நடு க்கங்கொள்ளப் பொல்லாத வாணாசுரனுடைய விஸ் தாரமான தோள்களை யெல்லாஞ் சக்கரத்தினாலே நறுக்கி இரண்டுகைமாத்திரம் விட்டருளிய ஸ்ரீமந் நாராயணா எ-று. ௮௯

புன்சொல்லியேயகப்பட்டதும் போதாமலேயவ மேற்றெனக், கென்சொல்லுவோமென வெண்ணி

யோயாதோவெனக்கியாதுநீ, தென்சொல்லிலே வ
டசொல்லிலே திருவாய்மொழிச் சதுர்வேதமா,நன்
சொல்லிலே விளையாடுவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய மூடப்புத்தியினாலே பாடாநின்ற புல்லிதாகிய கவிதைச்சொல்லிலே அகப்பட்டதும்போதாமல் எனதுஅக்கியானத்தை யெல்லாம் ஏற்றபடியினாலே இவனுக்கு என்னசொல்லுவோமென்று திருவுள்ளத்திலெண்ணியதோ என்னமோகிருபைசெய் தருளாமலிருப்பதை அறிகிலேன் தமிழாகியதென்சொல்லிலேயுங் கிரந்தமாகிய வடசொல்லிலேயுந் திருவாய்மொழியென்னும் நான்குவேதத்தினுடைய நன்மைபெற்றசொல்லிலேயுந்திருவிளையாடல் செய்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா.

மெலியாமைமந் திருஞானமுமிகுபோகமுந் திட
தேகமும், சலியாமையும் பகைநாசமுந் தனராசியுந்
தருசீலமும், கலியாணமும்பெறநீதரக்கடனாளியாற்
பினுமுன்னைநான், நலியாமலே யருள்கூறுவாய் நா
ராயணா நாராயணா.

(இ-ள்.) மெலிதலில்லாமையும் அழகியஞானமுமிகுந்தபோகமும் வலியதேகமுஞ்சலியாமையும்பகைநாசமுந் திரவியராசியும் யோக்கியமான ஆசாரமுங் கலியாணம் இவையெல்லாந் தேவரீரிடத்தில்பெறும்படியான கடனாளியானதால் இனிஉம்மை நான்வருத்தாமல் பூரணமானகிருபைசெய்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று.

௬௧

சமத்தேதுநல் லறமேதருந் தயையேதருந்தவமே
துமிக், கமைத்தேதுமே லடைவேதுகா ரணமேது
பூரணமேதுசங்,கமத்தேதுரா கதமேதுசொல்கமை
யேதுசெல் கதியாவுநீ, நமத்தேதுவா ரகைவாசனே
நாராயணா நாராயணா.

(இ-ள்.) சாமர்த்தியங்கள் தானேது நல்லதருமம் தானேது அருமையான தயவுகள் தானேது அரியதவங்கள் தானேது மிகுந்த அமைப்புகள் தானேது

மலாகிய அடைவுகள் தானேது காரணங்கள் தானே
துபூரணங்கள் தானேது கூட்டங்கள் தானேது ஆண
வங்கள் தானேது சொல்லிய பொருமைகள் தானே
துசெல்லாநின்ற மோட்சங்கள் தானேது இவைகள்
யாவும் தேவரீருடைய கிருபையேயன்றி வேறில்லை
ஆதலால்உமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ்செய்து
நின்றேன் துவாரகவாசனாகிய ஸ்ரீமந்நாராயணா எ-று.

பித்தங்கயஞ் சொறிதேமல்கம் பிதமீளகா மலை
பாண்டுவுன், மத்தஞ்சுரஞ்சனிசன்னிகால்வலி சூலை
விக்குதல்கக்குவா, யுத்தம்பனந்தலைநோவுமற் றுள
நோயெலாந் தொடாரமலாள், நத்தின்முகற் கொரு
காலனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) பித்தம் க்ஷயம் சொறி வெள்ளைப்பாண்டு
நரை ஈளை காமாலை பாண்டு உன்மத்தம் சுரம் சனி
சன்னி கால்வலி சூலை விக்கல் கக்குவாய் தம்பனம்
தலைநோய் மற்றுஞ்சொல்லாநின்ற நோய்களெல்
லாம் அடியேனைத்தொடாரமலிரட்சித்தருளவேண்
டும் நத்துமுகனுக்கு ஒருஇயமனாகிய ஸ்ரீமந்நாரா
யணா எ-று. ௧௯

துறையூருமா முதலைக்குலச் சுனையொத்த மன்ன
வர்வாசலில், குறையூர்வதுங்கசைசாடவே சூலைகின்
றதுந் தலைசோரியாய், முறையூர்வதும் பிறருன்னை
யே முனிபாவமுந்தெரியேனலோ, நறையூரனேகரு
டாசலா நாராயணா நாராயணா.

(இ-ள்.) முதலைக்குலஞ்சஞ்சரியாநின்ற துறையை
யுடைய சுனைபோலேயிராநின்ற துஷ்டமன்னவாவா
சலிலே குறைவுகளைச் சொல்லுமிடத்தில் அவர்கள்
தருமம்விசாரியாமல் நேர்ந்தபடிக்குப் பிரம்புகளா
லே அடித்திட் தேகம்நொந்து தலைகளிலே உதிரம்
பெருகும்போது முறையமிட்டுங் கேள்வியில்லாமற்
பிற்பாடு தேவரீரைத்தெயவமேயென்று வெறுத்துக்
கொள்பவருடைய பாவந் தீர்வதேயில்லை ஆதலால்
தேவரீர் சந்நிதானத்திலுமுன்னமே முறையமிட்டே

ன் திருவூரிலேயுந் திருவேங்கடமாகியகருடாசலத்
லேயும்நிலைபெற்ற ஸ்ரீமந்நாராயணா எ-று.

பிணிவிட்டதே விதியாவையும் பிழைவிட்ட
சுகசீவியாய்ப், பணிவிட்டதேநமனுரெனும் பகை
ட்டதே பலபூசலும், தணிவிட்டதே யதிஞானமே
தரவிட்டதேயுனையோதவாய், நணிவிட்டதே யெ
மட்டிலே நாராயணா நாராயணா.

(இ-ள்.) அடியேனுடைய சனனங்கள் தோறு
தொடரா நின்றபிணிகளையும் விதிகளையும்மன்மதன்
சண்டைகளையும் இவைமுதலாகிய யாவையும் நீக்கி
சுகசீவியாகவும் அதிகஞானியாகவும் வாக்கினுலே
உம்மை ஓதும்படியாகவும் என்மட்டிலேபொருந்து
தலாகத் தேவரீருடைய கடாட்சவீக்ஷணியஞ் செய்
தருளியது ஸ்ரீமந்நாராயணா எ-று.

வாய்செய்தபுண்ணியங் கோடியென் வழிசெய்
புண்ணியங்கோடியென், தாய்செய்த புண்ணிய
கோடிதந்தையர்செய்த புண்ணியங்கோடியென், பா
செய்தபுண் ணியங்கோடியென்பதிசெய்த புண்ணி
ங்கோடியென், நான்செய்தபுண் ணியங்கோடிக
நாராயணா நாராயணா.

(இ-ள்.) எனதுவாக்கும் எனதுமரபும் எனதுமா
தாவும் எனதுபிதாவும் எனதுபாடலும் எனதுஊ
ரும் எனதுநாவும் இவைகளெல்லாஞ்செய்தபுண்ணி
யம் அனேகங்கோடியானபடியினுலே தேவரீரைப்பி
ரசன்னமாகக் காணக்கிடைத்தது ஸ்ரீமந்நாராயணா

உன்கோயிலென்கால்சூழவு முன்பாதமென்கண்
காணவும், நின்பாடலென்வாய்பாடவு நின்காரிய
கைசெய்யவும், என்காதுநின்புகழ்கேட்கவு மென்
னெஞ்சுநின் னினைவுன்னவும், நன்காகநல்வரமே
ருள் நாராயணா நாராயணா.

(இ-ள்.) உமதுதிருக்கோயிலை யென்கால்சூழவும்
உமதுதிருவடியை என்கண்காணவும் உமதுசரித்தி
த்தை என்வாய்பாடவும் உமது கைங்கரியத்தை என்

கைசெய்யவும் உமதுபுகழை எனதுகாதுகேட்கவும் உமதுதியானத்தை என்னெஞ்சுசெய்யவும் இத்தன்மையாகிய நல்லவரத்தைக் கொடுத்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா எ-று. கூஎ

இற்கண்ணெலா நாராயணா வெங்கெங்கணுநாராயணா, சொற்கண்ணெலா நாராயணா தொழிலெங்கணுநாராயணா, முற்கண்ணெலாநாராயணா முகமெங்கணுநாராயணா, நற்கண்ணெலா நாராயணா நாராயணா நாராயணா.

(இ-ள்.) வீடுகள்யாவையினும் வெளிகள்யாவையினும் சொல்லுகள்யாவையினும் தொழில்கள்யாவையினும் முன்னர்கள்யாவையினும் முகங்கள்யாவையினும் பரிபூரணமாயிருப்பது தேவரீரேயன்றிவேறொருவருண்டோ ஸ்ரீமந்நாராயணா எ-று.

தேறுந்திருப்பதிவேங்கடந்தெரிசித்து நாரணவென்றுநான், நூறும்படிப்பவர்பண்ணுவார் நூறும்மிருந்துலகாண்டபின், பேறும்பெறும்பிள்ளைப் பெறும் பெருமைப்பெறும் பெறுவிப்பையே, நாறுந்துழாயணிமார்பனே நாராயணா நாராயணா.

(இ-ள்.) வேதமுடிவிலே தேறுகின்றதிருவேங்கடமென்னுந் திருப்பதியைத்தரிசித்த ஸ்ரீமந்நாராயணசதகம் நூறுபாடலையும் படிப்பவர்களும் அர்த்தங்களாராய்பவர்களும் நூறுவருஷமிருந்து பிள்ளைகள்முதலாகிய உலககாட்சியினது பலனை அனுபவித்தபிற்பாடு அவர்களுக்கும் பெருமையைப் பெற்ற பரமபதத்தைக் கடாட்சித்தருளாநின்ற பரிமளிக்குந் திருத்துழாயணிந்த திருமார்பையுடைய ஸ்ரீமந்நாராயணா எ-று.

நனிவாழிநின் பல்கோயிலு நனிவாழிநின் பலதேவிமார், நனிவாழிநின் னடியாரெலா நனிவாழி நின் பலவைபவம், நனிவாழிநின் வடவேங்கட நனிவாழிநின்கவிகற்றபேர் நனிவாழிநின் கவிகேட்டபேர் நாராயணா நாராயணா.

சு அ வடவேங்கட நாராயணசதகம்.

சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும் மலைநாட்டிலும்
நாட்டிலும் தொண்டைநாட்டிலும் வடநாட்டிலும் தே
நித்தியவைபவமாய் விளங்காநின்ற திருவரங்கம் பெரிய
யில்முதல் பரமபதம் அந்தியமாகவிராநின்ற நூற்றெட்டு
ருப்பதியிலும் பாகவதர்கள் உச்சிவிக்கத் திருக்கோயில
ண்டு எழுந்தருளியிராநின்ற தேவரீருடைய திருக்கோயி
லெல்லாம் பல்லாண்டுபல்லாண்டு மிகுதியாகவாழக் கட
தேவரீருடைய வக்ஷஸ்தலத்திலின்பமுற்று வீற்றிராநின்
காலட்சுமியும் பூமிபிராட்டியும் நீளாதேவியும் பல்லா
பல்லாண்டு மிகுதியாகவாழக்கடவது திரிகாலங்களிலும்இ
விடாமல் தமதுதிருவுள்ளமே ஆலயமாகச் செய்துகொ
தேவரீரைத் தியானஞ்செய்யும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்
கண்ணுள்ள பரமபாகவதர்களியாவரும் பல்லாண்டுபல்லா
மிகுதியாகவாழவும் தேவரீருடைய மகிமை யுற்றுவிளங்
வைபவங்கள் பல்லாண்டுவாழவும் சமஸ்கிர்தபாஷைகளும்
ராவிடபாஷைகளும் எல்லையாகியும் சதுர்வேதங்களும் ம
சாஸ்திரங்களும் சொல்லப்பட்ட பொருள்களுக்கெல்லாம்
டிவாகியும் தர்மமேசொரூபமாகியும் பூமியும் பூமிதேவிக்
ணிமுடியாகியும் தனக்கொப்பில்லாமல் பெருமைபொருந்
சொர்ணமயமாகியும் ஓங்கியதேவரீர் எழுந்தருளியிராநின்ற
டக்கின்கணுள்ள திருவேங்கடமலையும் பல்லாண்டுபல்லா
மிகுதியாக வாழக்கடவது திரிகாலக்கியானிகளாகிய வசிஷ்
வாமதேவ விஸ்வாமித்திர வியாசபராச சுகசவுனகாதி ரிஷ
ளும் மகாத்துமாக்களாகிய நம்மாழ்வார்முதலிய ஆழ்வார்க
பாதாத்தாரகராகிய இராமாநுசாரியரும் வாலிகளான தன்
பவபூதிகாளிதாசன் கம்பர்முதலாகியகவிச்சக்கிரவர்த்திக
பரமபாகவதோத்தமர்களாகிய அழகியமணவாளப்பிள்ளைப்
ருமாளையங்கார் முதலாகிய பரமபாகவத பக்தர்களுமாகிய
ர்களாற் செய்தருளியவேதங்களும் வைஷ்ணவாயகமங்க ளா
ஸ்ரீபாஞ்சராத்திர வைகாசனங்களும் இதிகாசங்களாகிய இ
மாயண பாரதங்களும் வாமம வராக முதலிய புராணங்க
மற்றுமுள்ள நூல்களுமாகிய இவைகளில்சொல்லப்பட்டிருக்
தேவரீருடைய நித்யகல்யாணகுணங்களை அத்தியயனஞ்
ய்த பாகவதர்கள் யாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதி
வாழக்கடவது இவ்வாறுமகிமையுற்ற தேவரீர்விஷயமாக
ய்தருளிய கவிகளை சிரவணஞ்செய்ததுடன் கேள்வியுற்ற ப
வதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வா
கடவது ஸ்ரீமந்நாராயணா.

வடவேங்கடநாராயணசதகம் மூலமும்-உரையு முற்றிற்று.